488

Registered No. M. 2330. "SIDDHANTHAM" Vol. 10—No. 10.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"



| மலர் ௧0 | ஈசுவர ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1937ஹு அக்டோபர்மீ | இதழ் ௧0 |
| --- | --- | --- |



உள்ளுறை



| | பக்கம் |
| --- | --- |
| தலைமையுரை ... ... | ௪௱௮௧ |
| தமிழும் ஹிந்தியும் ... ... ... | ௪௱௯௭ |
| பெங்களூரில் சமாஜ மகாநாடு ... ... | ௫0௬ |
| நல்வரவேற்பு ... | ௫௧௧ - ௫௧௨ |
| சுந்தரர் நாடகம் ... ... ... | ௫௧௫ |
| தேன்கூடு ... ... ... | ௫௨௮ |




பத்திராசிரியர் : அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ.

சைவ சித்தாந்த மகாசமாஜம்

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

வருஷச் சந்தா ரூபா 2. 1937 தனிப் பிரதி அணா 4.

உ
சிவமயம்

# சமாஜ அறிக்கைகள்

1. நமது சமாஜத்தின் ஐப்பசி மாதக் கூட்டம் திருப்புகழ் பாடல்பெற்ற மாடம்பாக்கம் என்ற தலத்தில் ஸ்ரீமத் பால்சுவாமிகள் ஆதரவில் 22-10-1937 வெள்ளிக்கிழமை மாலை 4-மணிமுதல் நடைபெறும். திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், ச. சிவகுமாரன் முதலியோர் பேசுவார்கள். இந்தத் தலம் தாம்பரம் ஸ்டேஷனிலிருந்து 2 மைல் தொலைவிலுள்ளது. அன்பர்களனைவரும் வருக.

2. சமாஜத்தின் முப்பத்திரண்டாம் ஆண்டுவிழா வேலூரில் கிரிஸ்த்மஸ் விடுமுறையில் நடைபெறுதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விழா நடைபெறும் நாட்கள், தலைவர் தேர்தல் முதலியவற்றைப்பற்றித் தீர்மானிக்கச் சமாஜப் பொதுக்கூட்டமொன்று 23-10-1937 சனிக்கிழமை மாலை 4¼-மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையின் "குகாநந்த" நிலயத்தில் நடைபெறும். அன்று போதிய கூட்டநிறைவெண் இல்லாவிடில் அக்கூட்டம் அதே இடத்தில் அடுத்தநாள் அதே மணிக்கு வருவோரைக் கொண்டு முடிவடையும். கூட்டத்துக்கு வர இயலாதவர்கள் தங்கள் கருத்துக்களைத் தபால்மூலம் காரியதரிசிக்கு 20-10-37க்குள் தெரிவித்தல் நலம்.

3. கார்த்திகைமாதத்தில் சமாஜக் கூட்டத்தைத் தங்கள் ஊரில் நடத்திவைக்க விரும்புவோர் உடனே காரியதரிசிக்கு விண்ணப்பித்துக் கொள்வார்களாக.

4. சமாஜம் நடத்தும் சைவத்தேர்வுகள் இவ்வாண்டில் 21-11-37 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும். மாணவர்கள் இருப்பிடத்துக்குக் கூடியவரையில் சமீபமான ஊர்களிலேயே தேர்வுநிலயங்கள் அமைக்கப்படும். தேர்வு நிலைய நுழைவுச்சீட்டுகள் மாணவர்கட்கு 10-11-1937-ல் தபால் மூலம் அனுப்பப்படும்.

5. சமாஜத்தின் ஆதரவிலும் இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் ஆதரவிலும் ஒரு பொதுக்கூட்டம் ஷெ சபையின் "குகாநந்த" நிலயத்தில் விநாயகர் சதுர்த்தித் திருநாளன்று நடைபெற்றது. திருக்கைலாய யாத்திரை செய்து முடித்த உயர் திரு விபுலாநந்த சுவாமிகள் "திருக்கைலாய யாத்திரை" என்பதுபற்றியே விரிவுரை நிகழ்த்தினார்கள். திருக்கைலாய யாத்திரை செய்யும் முறை, வழி விவரங்கள், கைலைக் காட்சி, மானதவாவியின் சிறப்பு, பிரயாணம் செய்யும் அன்பர்கள் குளிரிலும் நுண்ணிய காற்றினாலும் படும் துன்பம், கைலையின் உயர்வில் சிந்தை மேல்நோக்கி ஒன்

Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.



| | | |
|---|---|---|
| மலர் க0 | ஈசுவர ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1937ஸ்ரீ அக்டோபர்மீ | இதழ் க0 |



## பெங்களூர் மகாநாட்டுத்

## தலைமையுரை

[திவான்பகதூர் - கீ. தெய்வசிகாமணி முதலியார்]

சைவநெறிப் பெரியோர்காள், சகோதர சகோதரிகாள்!

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 32-ம் ஆண்டு மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி வற்புறுத்திய சமாஜத்தின் ஆட்சியாளர்கட்கும், பெங்களூர் ஸ்ரீ கணபதி விலாச சபை நிர்வாக கர்த்தர்கட்கும் எனது மனமார்ந்த வந்தனத்தை சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். தமிழிலேனும் சமய ஞானத்திலேனும் ஆராய்ச்சி செய்து தேர்ச்சியடையாத என்னை வரித்ததற்குக் காரணம் அறிகின்றேனில்லை. பண்டிதர்களில் சிறந்தோரை ஒரு முறையும் பாண்டித்தியமில்லாது உலகஞானம்மாத்திரம் சிறிதுஉள்ளவர்களை

ஒரு முறையும் தலைமை வகிக்கும்படி செய்வது நேரியது என்னும் கொள்கையோ ! எப்படியாயினும் கல்வியில் கரைகடந்த பண்டிதர்கள் நிறைந்த இப்பேரவைக்கு யான் தலைமை வகிப்பது இறுமாப்பின் பாற்படும். நானே வலிந்து கொண்ட செயலல்லாமையினால் அதனால் வரும் குற்றம் என்னுடையதாகாது. எனினும் என் அறியாமையை மன்னித்து என் அனுபவத்தால் நான் சொல்லப்போவதைச் செவி கொடுத்துக் கேட்கவேண்டுகின்றேன்.

## சமாஜத்தின் நோக்கம்

பெங்களூர் ஸ்ரீ கணபதி விலாச சபையின் அன்பினால் சைவசமாஜத்தின் 32-ம் ஆண்டு மகாநாட்டைக் கொண்டாட நாம் இப்பொழுது கூடியிருக்கிறோம். இப்படி வருஷந்தோறும் இந்தியா, பர்மா முதலிய தேசங்களின் ஏதேனும் ஒரு பாகத்தில் கூடி சமய ஞானத்தைப் பரவ வைப்பது சமாஜத்தின் நோக்கங்களில் ஒன்று. சென்ற 32 வருஷங்களாக நாம் இப்படிக் கூடியிருக்கிறோமென்பதும் நீங்கள் அறிந்த விஷயம். ஆண்டுக் கூட்டங்களைத் தவிர மாதாந்தரக் கூட்டங்களையும் சில காலமாகக் கூட்டி வருகின்றோமென்பதும் நீங்கள் அறிந்த விஷயம். இக்கூட்டங்களிலே எம்மட்டுஞ் சமய ஞானத்தைப் பரவச்செய்ய முயற்சி எடுத்துக் கொள்கின்றோமென்பது சிந்திக்கத்தக்கது. சென்ற ஆறுவருஷங்களில்நடந்த கூட்டங்களில் பேசப்பட்ட விஷயங்களின் கணக்கொன்றை சமாஜத்தின் காரியதரிசியார் திருவாளர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் சிரமம் பாராது எடுத்துக்கொடுக்க அதனை கவனித்துப் பார்த்தேன். அப்போது என் மனதிலுதித்தது யாதெனில் நமது சமாஜத்தைச் சமய சமாஜமென்று மாத்

திரம் சொல்லாமல் தமிழ்ச் சங்க மென்றும் சேர்த்துச் சொல்லல் வேண்டு மென்பதே. பேசப்பட்ட விஷயங்களில் பல தமிழ் மொழியையும் தமிழ் நூல்களையும் ஆராய்ச்சி செய்த விஷயங்கள். இவ்வாண்டு விழாக் காலத்திலும் தமிழ் நூல்களையும் தமிழுரையும் பற்றிய விஷயங்கள் பேசப்படப் போகின்றனவென அறிகின்றேன். இதைக் குறையாகக் கூற வந்தவனல்லன். ஆயினும் இவ்விஷயத்தா லெனக்குண்டாகும் பயத்தை எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். சமய ஞானத்தைப் பரவச் செய்ய முன் வந்த இச்சங்கமானது பிற விஷயங்களுக்கு அதிகமாய் இடம் கொடுத்தால் தனது தலையாய நோக்கம், காலக்கிரமத்தில் மிகுதியும் கவனிக்கப்படாமைக்கு இடமுண்டாகும். சமாஜச் செயலாளர்கள் இதில் கவனம் செலுத்த அவசியம் இருக்கின்றதோ இல்லையோ வென்பதைச் சற்று நினைவிற்குக் கொண்டுவர வேண்டுமென்றே இதனை நான் இங்குக் குறிப்பிட்டேன்.

### சமய நோக்கம்

எந்தச் சமயமும் இரண்டு முக்கியமான நோக்கங்களையுடையது. ஒன்று, உலகத்தாரை நேரிய வழியில் நடக்கச் செய்தல்; மற்றொன்று, ஈசுவரனிடத்தில் பக்தி யுண்டாகும்படி செய்தல். சைவ சமயமும் இந்தக் கொள்கையை அடிப்படையாக உடைத்தாயுள்ளது என்பதை நீங்கள் மறுக்கமாட்டீர்கள். உலகத்தில் ஒருவன் மற்றொருவனுக்குச் செய்யு முதவியில் சிறந்தது சமய ஞானத்தைச் சொல்லித் தருவதெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதனினும் சிறிது தாழ்ந்தது ஒருவனுடைய பொது அறிவை வளரச் செய்ய உதவுவது. இதனினும் தாழ்ந்தது ஒருவன் தேகம் செவ்வனே வளர்ந்து இருக்க உதவுவது. பசி யுண்டானபோது அதை ஆற்று

வதும், ஆடையின்றிக் குளிரில் வருந்தும்போது ஆடையுதவு வதும், நோயால் வருந்தும்போது அதனைத் தீர்க்க முயற்சிப் பதும் இவைபோன்ற தேகக்குறைபாடுகளை நிவர்த்திப்பதும் யான் முன்சொன்ன உதவிகளிலும் தாழ்ந்தனவாகவே கரு தப்படுகின்றன. ஏனெனில் இப்பொழுது உண்டான பசியை யாற்றினுலும்மறுபடியும் பசிவந்தே தீரும். இப்போது ஆடை கொடுத்தாலும் கொடுத்த ஆடை கிழிந்தவுடன் மற்றோர் ஆடை தேட நேரிடும். இப்போது நோயகன்றாலும் மற் ரோர் முறை நோய் வரும். உலகத்தில் மானுடர்களுக்குண் டாகும் துன்பங்களை உடம்பின் உபாதியைத் தடுக்கச் செய்யு முதவியால் மாத்திரம் நிவர்த்திக்க முடியாது. மனத்தை மாற்றி ஒழுக்கத்தைப் புகுத்தி மனிதனைத் தூய்மையாக ஆக்கினலொழிய இத்துன்பங்களறவே ஒழியா. தேகம் சுகமாய் இருப்பதற்கு வேண்டிய ஸ்தாபனங்களை நாடெங்கும் பரப்பி, அவைகளால் ஜனங்களுக்குச் சுகத்தையுண்டு பண் ணிக் கொடுத்தாலும் உலகத்தில் துன்பம் அறவே நீங்காது. குணம்மாறித் தூய்மையுண்டாகும்வரையில் அத்துன்பங்கள் நிலைத்து நிற்கும், ஆகவே தேகக்குறையை நீக்க மாத்திரம் செய்யுமுதவி போதாது. அறிவை வளர்க்குமுதவி மிக அவசியம். அதன் பொருட்டே இவ்வுதவி முன்னையதினும் மேம்பாடுடையதெனச் சொல்லப் படுகிறது. அறிவினும் ஆத்ம அறிவைக் கொடுக்குமுதவி ஏனைய இரண்டினும் சிறப் புடையது. ஆத்ம அறிவைக் கொடுக்கும் சமய ஞானமானது சிறந்ததன்றோ? இந்தச் சிறந்த தொழிலை மேற்கொண் டுள்ளதன்றோ இந்தச் சைவ சித்தாந்த மகா சமாஜம்?

## சமய ஞானம்

சமய ஞானத்தால் நாம் பெறுவன இரண்டுள்ளன. ஒன்று பணி செய்வது; மற்றொன்று கடவுளிடத்து அன்பு

அல்லது பக்தி செய்வது. அப்பர் சுவாமிகள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனத் திருவாய் மலர்ந்தருளினார்கள். "பணி செய்வது" என்று சொல்லாமல், "பணி செய்து கிடப்பது" என்று சொல்லியிருக்கின்றார்கள். கிடப்பது என்னும் சொல்லால் தெரிவதென்ன? கிடக்கையிலே மனிதன் ஓய்ந்து மனதுக்கு மிகுதியும் கவலை கொடாமலிருக்க விரும்புகின்றான். இப்பணி நாம் செய்யக் கடவது என உன்னிச் செய்தபின் அதனைப்பற்றிக் கவலை கொள்ளாமலிருப்பது. இப்பணி செய்வதனால் நமக்குக் கிடைக்கும் பலன் என்ன என்று முன்னேயும் கருதுவதில்லை, செய்த பின்னேயும் அதைப்பற்றி நினைப்பதில்லை. தனக்கல்லாமல் உலகத்தாருக்கு நன்மை பயக்கக்கூடிய பணிகள் எவையுள்ளனவோ அவைகளை யாராய்ந்து உலகத்தில் பிறந்த காரணத்தால் அப்பணிகளைச் செய்வது நமது கடமையென நினைத்து அவைகளைச் செய்வதே நாம் செய்யவேண்டுவது. இப்பணிகளை நாம் செய்யும் வழியில் கிடக்கின்ற பொருளைக் கொண்டு நமது உடம்பை யோம்புவது குற்றமாகாது. எப்பணியைச் செய்தாலும் அது முழுவதும் நன்மையுள்ளதாயிராது. முழுவதும் தீமையுள்ளதாகவும் இராது. நன்மையும் தீமையும் கலந்துள்ளதாகவே யிருக்கும். சென்னையில் இப்போதுள்ள அரசாங்கத்தார் குடியை நிறுத்த உத்தரவு செய்திருக்கிறார். சேலம் ஜில்லாவிலுள்ள ஏழை மக்களுக்கு இது பெரும் நன்மையை உண்டுபண்ணு மென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் உற்பத்தி செய்யும் தொழிலிலும் விற்பனை செய்யும் தொழிலிலும் ஆயிரக் கணக்கான மக்களுக்கு வருவாய் போகுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. காட்டில் மிருகங்கள் மிகுதிப்பட்டு நாட்டில் பயிருக்

கும், மக்களுக்கும், ஆடு மாடுகளுக்கும் ஊறு செய்கின்றன. அரசன் வேட்டையாடி அவைகளைக் கொல்கின்றான். இச் செயலாலே கொல்லப்படுகின்ற பிராணிகளுக்குத் துன்பமும் நாட்டிற்கு நன்மையும் உண்டாகக் காண்கின்றோம். ஆகவே சோம்பராயிராமல் இடைவிடாது பணி செய்துகொண்டே இருக்க வேண்டும். செய்யும் பணியில் பற்றில்லையானால் நமக்குப் பந்தம் உண்டாவதில்லை, நமக்கு நிகழும் ஒவ்வொரு நினைவும் நல்லதானாலும் தீயதானாலும் மனத்தின் விரிப்பில் அது ஒரு கீற்றை உண்டாக்குகிறது. இக்கீற்றுக்களின் பெருக்கமே ஒருவனுடைய குணத்தை யாக்குவது. நல்லெண்ணங்கள் அதிகமானால் நல்ல குணம் உண்டாகி நற் செய்கை அதிகரிக்கிறது. தீய குணங்கள் அதிகமானால் தீச் செய்கை அதிகமாகிறது. நல்லெண்ணங்களின் கீற்றுக்கள் அதிகப்பட்டிருக்கிற மனத்தையுடைய ஒருவன் தீயதுசெய்ய விரும்பினால் அவன் மனது அவனைச் சுலபத்தில் அதைச் செய்ய விடுவதில்லை. தயிர் கடைவார் மனத்தைப்போல முன்னும் பின்னும் ஊசலாடிக் கடைசியில் தீயதைச் செய்யாமல் விட்டு விடுவான்.

அப்பர் சுவாமிகள் 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்று சொன்னபோது, பணி என்ற வார்த்தையால் அறியக் கிடந்தது உலகத்திற்கு நல்லது செய்வதே. ஆனால் உலகம் நம்முடைய பணியை எதிர்பார்த்துத் தான் நடக்கிறதா என்னும் ஒரு கேள்வி உண்டாகலாம். நாம் பணி செய்யாவிட்டால் உலகம் முடிவிற்கு வந்துவிடுமோ? வாராது; வாராது. நம்முடைய நன்மையின் பொருட்டே நாம் பணி செய்கின்றோம். பணி செய்வதுதான் நமது தர்மம், நமது கடமை. ஆகையினாலே நாம் உலகத்திற்கு நன்மையுண்டாகப் பணி

செய்ய வேண்டும். பற்றில்லாமல் பணி செய்வது மிக அவசியமானாலும் அது எளிதிற் கூடாத வழி. தீயதை ஒழித்து நல்லதைச் செய்ய நாம் விரும்புவோமாக.

கடவுளிடத்து அன்பு செய்வது

சமய அறிவு பணி செய்வதைத் தவிர்த்து மற்றொன்றைக் கொடுக்குமென்று முன் சொன்னேன். அதாவது கடவுளிடத்து அன்பு கொள்வது. அறிவால் ஒருவன் ஆராய்ச்சிசெய்து கடவுள் உண்டென்ற முடிவிற்கு வருமுன் பல பள்ளங்களில் வீழ்ந்து கடவுள் இல்லையென்று சொல்லும் நாஸ்திகர்களில் ஒருவன் ஆனாலும் ஆகக்கூடும். சிறந்த அறிவாளிகளாயுள்ளவர்களிலும் சிலர் பண்டைய நாளிலும் தற்காலத்தும் நாத்திகர்களே யென்று சரித்திரங்கள் கூறும். தெய்வமுண்டென்ற ஒரு சித்த முண்டாவதற்கு வினையின் பயன் கைகூட்ட வேண்டும். அப்படி தெய்வமுண்டென்ற நம்பிக்கை யுண்டானாலும் அவனிடத்தில் அன்பு செலுத்துவது எளிதன்று. மனத்தைப் பழக்கி அதைச் செலுத்த விடவேண்டும். காலத்தையெல்லாம் தீய வழியில் செலவிட்டுக் கடைசி நாளில் கடவுளிடத்தில் அன்பைச் செலுத்தி விடலாமென்று நினைப்பது கூடாத காரியம். நான் மேலே சொன்னதுபோல தீய எண்ணங்களின் கீற்றுக்கள் அதிகமானால் கடவுளிடத்தில் அன்பு செலுத்த ஆக வேண்டிய நாளும் அதிகமாகும். கடவுளை இடைவிடாமல் நினைக்கும் பழக்கத்தை உண்டாக்கிக் கொண்டாலொழிய அவனிடத்தில் அன்பைச் செலுத்த இயலாது. நமக்கு நிரம்ப கஷ்டமான ஒரு வஸ்துவை ஒரு கால வரையறை யளவாவது, விடாமல் நினைத்துக் கொண்

டுள்ளோமல்லவா! கடவுளை நினைக்க ஆரம்பிக்கும் காலத்தில் அந்தநினைவு அவனிடத்தில் சில நிமிஷங்கள்தான் இருக்கும். பழக்கம் பண்ணப்பண்ண நாட்கணக்கிலாகி முடிவில் வருஷக் கணக்கிலுமாகும். சிலர் தியானம் பண்ண ஆரம்பித்துப் பல வருஷங்களாக அவர்கள் உடலின்மேல் புற்று வளர்ந்தது என்னும் கதையைக் கேட்டிருக்கின்றோமல்லவா? அந்தக் கூற்று உண்மையாயிற்று. அது நினைவின் பலனாலேயே ஆனது என்பதை மறுக்கமுடியாது. அந்தக் கூற்றை உண்மையல்ல வென்று சொல்லவும் முடியாது. இக்காலத்திலேயும் கூட நினைவின் வலிவைக் கண்கூடாக நாம் காண்கின்றோம். ஒருவன் மனதில் நினைத்துக் கொண்டிருப்பதை மற்றொருவன் சொல்வதை நாம் அறிவோமன்றோ? பாம்பால் கடிக்கப்பட்டவன் மந்திரத்தின் வலியால் உயிர் மீண்டான் என்று நாம் அறிகின்றோம அன்றோ? ஆகையினாலே ஒருவன் இடைவிடாது ஈசுவரனை நினைத்து அவனிடத்திலே முழுமனதையும் செலுத்தும் பழக்கம் செய்வானானால் நாளடைவில் அவனைக் காண வேண்டுமென்கின்ற ஆசை அதிகரித்துப் பரம பக்திமானாவான். பக்தி அதிகரித்து ஈசுவரனிடத்தில் இரண்டறக் கலக்கும் உரிமையையும் பெறுவான் என்று பக்திமான்கள் சொல்லுகிறார்கள். கர்மயோக நூல்களின்படி ஒருவன் ஒரு வினையைச் செய்வானானால் அதன் பலனை அனுபவித்தே தீரவேண்டும்.

இவ்வுலகத்திலே எவருக்கும் அந்தப் பலனை அனுபவியாமல் தடுப்பதற்குச் சக்தியில்லை. ஆனால் நமது சைவ சமயத்தின் கொள்கையின்படியும் வைஷ்ணவ சமயத்தின் கொள்கையின்படியும் பக்தி மேலிடும்போது எஞ்சி இருக்கும் கர்மத்தின் மூட்டையை ஆண்டவன் எரித்து விடுகின்றான் என்

பது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனது பற்றிச் சைவ சமயத்தினராகிய நாமெல்லோரும் கடவுளிடத்தில் பக்தி பண்ணினால் நமக்கு நற்கதி யுண்டென்று நினைக்கின்றோம்.

கடவுளிடத்தில் அன்பு செய்வதற்கு நித்திய கர்ம அனுஷ்டானங்கள் அவசியமாகும். இக்கர்மானுஷ்டானங்களில்லாமல் மனதை அடக்கி ஒரு வழிப்படுத்தல் சுலபமாகாது. அகத்தூய்மை உண்டாவதற்குப் புறத் தூய்மையும் வேண்டும். நாடோறும் அதிகாலையி லெழுந்து தேக உபாதிகளைக் களைந்து ஸ்நானம் செய்து அனுஷ்டானங்கள் முதலிய கிரியைகளைக் கிரமமாய்ச் செய்ய வேண்டும். ஈசுவரனைத் துதிப்பதற்கு நமது வீட்டில் ஒரு தனி அறை இருக்கவேண்டும் என்று யோக சாத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் அந்த அறையில் யாரும் உறங்கக் கூடாதென்றும் அதைப் புனிதமாய் வைத்திருக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றன. நீராடி அகமும் புறமும் தூய்மையாயின பிறகே அந்த அறையிற் புகுதல் வேண்டும். எப்பொழுதும் அந்த அறை புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லாமலும் கண் கவரும் ஓவியங்களும் அதில் இருத்தல் வேண்டும். காலையிலும் மாலையிலும் தூபம் காட்டப்பட வேண்டும். அந்த அறையில் கோபமேனும் சண்டையேனும் செய்யக் கூடாது. தீய எண்ணங்களும் உதிக்கக் கூடாது. நம்மைப்போன்ற எண்ணமுடையாரையன்றி வேறெவரையும் அந்த அறையில் புகவிடக் கூடாது. இப்படி அந்த அறையை வைத்துக் கொண்டிருந்தால் நாளடைவில் அது நிர்மலமான தெய்வீக அறையாக விளங்கும். நமக்கு மனதில் விசனமோ கஷ்டமோ நேரும்போது அந்த அறைக்குள் நுழைந்த மாத்திரத்தே மன அமைதி யுண்டாகும். இந்த

நோக்கங் கொண்டுதான் நமது கோயில்கள் கட்டப்பட்டன. ஆனால் இப்போதிருக்கும்பெரும்பான்மையான கோயில்களில் இந்த நோக்கம் முழுவதும் மறக்கப்பட்டுப் போய்விட்டது. இப்போது கோயில்கள் இருக்கும் நிலையைப் பற்றி சமாஜத் தின் 30-ஆம் ஆண்டு விழாவின்போது விரிவாகப் பேசி இருக்கின்றேன். அப்போது சொன்னவைகளை இப்போது மீண்டும் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேனில்லை. மேற் சொன்னபடி ஏற்படுத்திஇருக்கும் அறைக்குள் ஒருவன் நுழை யும்போது செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிற நிய மங்களில் முதலாவது இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லா வஸ்துக் களிடத்தும் தன் நல்லெண்ணத்தை அனுப்பவேண்டு மென் பது. "எல்லாவஸ்துக்களும்சந்தோஷமாய்இருக்கட்டும். எல்லா வஸ்துக்களும் சாந்தத்தோடு இருக்கட்டும். எல்லா வஸ்துக் களும் அனுக்கிரகிக்கப்படட்டும்" என்னும் மந்திரத்தைச் சொல்லவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நோக்கத்தின் பொருட்டன்றோ எழுந்தது நம் திவ்விய தேவாரப்பாசுரம்.

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீய தெல்லா மரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

இந்தப் பாட்டின் உட்கருத்து, மற்றவர்கள் சுகமாய் இருந்தால் நாமும் சுகமாய் இருப்போம், நாம் சுகப்படுவதற்கு சுலபமானவழி மற்றவர்களைச் சுகமாக இருக்கச்செய்வதுஎன் பதே. இப்படிஅண்டத்திலுள்ள யாணும் சுகமாய்இருக்கஜபித் தபின் கடவுளைத் துதிக்கவேண்டும். கடவுளைத் துதிக்கும்

போது, பணத்திற்கேனும் சுகத்திற்கேனும் அல்லது சுவர்க்கத்திற்கேனும் துதிப்பது கூடாது. அறிவும் விளக்கமும் உண்டாகிக் கடவுளிடத்தில் அன்புண்டாக வேண்டுமென்று கேட்கவேண்டும். கடவுளைப் பிரார்த்தித்த பின் நம்முடம்பை நினைத்து அது உறுதியுள்ளதாகவும் சுகமுள்ளதாகவுமிருப்பதாக நினைத்துக்கொள்ள வேண்டும். இந்த உடம்பின் உதவியால் உயிரை அதன் தொல்லையினின்றும் தப்புவிக்கக்கூடுமென்று நமது மனதிற்குச் சொல்லவேண்டும். மேலும் நமது மனது வலிவுள்ளது என்று அதற்குச் சொல்லவேண்டும். இந்த விதமாக மனதை ஒருவழிப்படுத்தி ஈசுவரனிடத்தில் அன்பு செலுத்தவேண்டும்.

இப்படி பெரியோர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். எந்தக் காலத்திலே எந்தக் காரியத்தை முடித்துக் கொள்ள வேண்டுமோ அதைச் செய்து முடித்துக் கொள்வதற்கு என்னென்னவெல்லாம் செய்ய வேண்டிய அவசியமுண்டோ அவற்றை எல்லாம், ஒத்தனவானாலும், ஒவ்வாதனவானாலும், செய்து கொள்ளலாமென்று சொல்லுகின்ற இக்காலத்திலே, நான் நாடோறும் நியமப்படி அனுஷ்டானங்கள் செய்யவேண்டுமென்று சொன்னேனானால் சொல்லுமிடம் சமாஜத்தின் கூட்டமானாலும், நான் சொல்வதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இருக்கக்கூடும். இவர்களுக்கு நான் சொல்வது ஒன்று உண்டு. இந்த நித்ய கர்மானுஷ்டானங்களெல்லாம் நமது நூல்களில் விதித்திருந்த போதிலும் அவை அவர்களுக்குப் பிரமாணமாக வேண்டுவதில்லை. ஜனசமூகத்தின் பாரம்பரை விருத்தியை ஆராய்ச்சி செய்கின்ற மேனாட்டு நிபுணர்கள் நித்திய கருமானுஷ்டானங்களைப் பாரம்பரையாக அனுசரித்து வந்த குடும்பங்களில் நெடுநாள் சாத்விக குண

முள்ளவர்களாகவே பிறந்து வருகிறார்கள் என்று சொல்லி யிருப்பதை நான் படித்திருப்பது நினைவிற்கு வருகிறது. இந்த நிபுணர்களையும் நாம் சாட்சியாகக் கொள்ளவேண்டாம். நம் நாட்டிலேயே பரம்பரையாக அனுஷ்டானங்களைக் கைக் கொண்டுள்ள சில ஜாதியார்கள் கொலை முதலிய கொடுந் தொழிலில் அதிகமாக ஈடுபடுவதில்லை யென்பது யாவரும் அறிந்த விஷயம். இந்த ஒரு நன்மையே நித்யானுஷ்டானங் களைக் கைவிடக்கூடாது என்பதற்குப் போதிய காரண மாகாதோ?

மனதை அடக்கி ஆளாதபோது அது தீச்செயல் செய்வது இயற்கைதான். மனதை அடக்குவதற்கு நியமம் இருந்தே தீரவேண்டும். இந்தக் காரணத்தின் பொருட்டே னும் இப்பொழுது கைநழுவவிடப்படுகிற அனுஷ்டானங்க ளெல்லாம் அப்படி விடப்படாமல் அனுஷ்டிக்கப்படவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## சமயத்தில் சாதிவேற்றுமை

மேலே நாம் துதிப்பதற்கு ஓர் அறை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் சொன்னபோது அந்த அறைக்குள் நம்மைப்போல் மனமொத்தவர்களை மாத்திரம் புகவிடவேண்டுமென்று சொன்னேன். இதனாலே இப்போது கோயில்களிலே சிலஜாதியார்களைப் புகவிடுவதில்லையென்னும் கொள்கையை நான் ஆதரிப்பதாக நீங்கள் நினைக்கக்கூடாது. மனமொத்தவர்கள் எந்தச் சாதியிலும் இருக்கக்கூடும். ஒரு சாதியாரை அடியோடு தகுதியுள்ளார்களல்லரென்று சொல் லுவதற்கு யாதோர் காரணமுமில்லை. சைவசமயத்தில் சாதி வேற்றுமை பாராட்டப்படுவதில்லை யென்று அடிக்கடி

சொல்லக் கேட்டிருக்கின்றேன். நாயன்மார்களின் சரித்திரங்களே சான்றெனச் சொல்லப்படுகின்றன.

ஆனால் நம் தென்னாட்டிலுள்ள சைவமடங்களைப் பாருங்கள்; அங்கு சாதியுள்ளதோ இல்லையோ என்பதை நீங்களே கூறுங்கள். இம்மடங்கள் எந்த நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டனவோ அந்த நோக்கத்தில் ஒரு அணுவளவையேனும் இப்போதைய மடங்கள் நிறைவேற்றுகின்றனவா வென்று பாருங்கள். இம்மடங்களால் இப்போது யாது பயன்? இவைகளைச் சீர்திருத்தவேண்டிய அவசியம் மிக்க அவசரமாக இருக்கிறது. சமய ஞானத்தைப் பரவச்செய்ய எழுந்த இந்த ஸ்தாபனங்கள் அதைச் செய்யாமலிருக்கவிடக் கூடாது. இப்போதிருக்கும் மடங்களில் எல்லா மடங்களும் தங்கள் கடமையைச் செய்யாமல் விட்டுவிட்டனவென்று நான்சொல்லவில்லை. ஏதோ சில மடங்கள் தங்கள் கடமையைச் செய்கின்றன. திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் இச்சைவ உலகுக்குச் செய்து வரும் நன்மை நீங்கள் எல்லோரும் நன்றாய் அறிந்ததே. அவரைப் போன்ற மடாதிபதிகள் மற்றும் சிலர் நமக்குக் கிடைப்பார்களானால் சைவசமயம் இப்போதிருக்கும் நிலையை அடைந்திராது. சுவாமிகள் நீடூழி வாழ்ந்து சைவசமயத்திற்குத் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

## கோயில்களின் மேற்பார்வை சபை

கோயில்களின் பரிபாலன விஷயத்தில் நான் ஒரு செய்தி சொல்ல விரும்புகின்றேன். கோயில்களின் நிர்வாகத்தில் காணப்படுகிற குறைகளை நீக்கும் பொருட்டு ஒரு மேற்பார்வை அமைப்பு அரசாங்கத்தாரால் சில வருஷங்களின்

முன் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது நீங்கள் எல்லோரும் அறிந்த விஷயம். அதுதான் "The Hindu Religious Endowments Board" என்று சொல்லப்படுவது. இந்த போர்ட் உண்டானபின் கோயில்களின் நிர்வாகம் மேன்மைப் பட்டதா இல்லையா யென்ற கேள்வி யுண்டாகிப் பலர் பல அபிப்பிராயங்களைச் சொல்கின்றார்கள். ஆனால் இந்த போர்ட் வந்தபின் கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களில், பலர் பறித்துக்கொண்டவை பல, மீண்டும் கோயில்கட்குச் சொந்தமாயினவென நான் சொல்லமாட்டுவேன். போர்ட் நிர்வாக முறையிற் குறைகள் இல்லை யென்று நான் சொல்ல வரவில்லை. பலருக்கு அதிருப்தி உண்டாயுள்ளது என்பதை யும் நான் அறிவேன். அந்த போர்டைத் திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறதென்று நான் சொல்வேன். இப்போர்ட் எடுபட்டுப்போய் கோயிலின் குறைகளை விசாரிக்க ஆளில்லாமல் விட்டுவிடுவது முறையாகாது. திருத்தி அமைப்பதே சரியென்று நினைக்கின்றேன்.

## இந்தி பாஷை - கட்டாய பாடம்

இங்கிலீஷ் பாஷை மிகச் சிறந்தோங்கும் இந்த நாளில் தமிழைப் போற்றுவாரில்லை. தமிழ் சென்னை இராஜதானியில் பெரும்பான்மையான மக்களுக்குத் தாய் மொழியாக விருந்தும் போற்றப்படுவதற்குரிய ஆதரவு இல்லாமையினாலே இப்போது நாம் பெருமையை அடையக் கூடிய நிலைமையில் இல்லை. இந்த நிலைமையிலே இந்தி பாஷையைக் கட்டாய பாடமாக வைக்க வேண்டுமென்று சொல்வது தமிழர்களின் மனதைக் கலக்கியிருக்கிறது. அவர்கள் உண்மையாகவே தமிழ் நசித்துப்போகுமென்று நினைக்கின்றார்கள். இந்த

நினைவு அரசியல் காரணமாக அவர்கள் மனதிற்புகுந்ததன்று. இங்கிலீஷ் பாஷைக்குச் சிலாக்கியம் ஏற்பட்டது முதல் நம் நாட்டின் தாய் பாஷைகளுக்குச் சிறுமை வந்தது. இப்போது இந்தி பாஷையும் கட்டாய பாடமாக வைக்கப்படுமானால் தமிழைப் படிப்போர் மிகக் குறைந்து சைவ சமயம் குன்றிப்போம் என்று நம் சமயத்தார் பயப்படுகிறார். வைஷ்ணவர்களும் ஆழ்வார்கள் பிரபந்தங்களைப் படிப்போர் காணப்படார் என்று எண்ணுகிறார்கள். இவர்களுடைய பயம் உண்மையென்றே கூறல் வேண்டும். இப்படி இவர்கள் பயப்படும் போது இந்தி பாஷையைக் கட்டாயபாடமாக வைக்க வேண்டுமா என்பதைக் கவனிக்க வேண்டும். இந்தியாவின் பெரும்பான்மையான பிரிவுகளிற் பலமாகாணங்களில் இந்தி பாஷையைச் சுலபமாக அறிந்து கொள்ளும் ஜனங்கள் மிகுதியாகவுள்ளார்கள். இந்திய அரசாங்கம் மக்களிடத்தில் ஒப்புவிக்கப்படும் காலத்தில், இந்தியாவின் பெரும் பாகத்தோர் அறியும் பாஷையைத்தான் அரசாங்கம் அரசியல்பாஷையாகக் கைக்கொள்ளும். இங்கிலீஷுக்கு இப்போதிருக்கும் சிறப்பு எப்படியும் குறையும். அந்தப் பொது பாஷையைத் தென்னிந்திய வாசிகளாகிய நாம் கற்றுக் கொள்ளாவிட்டால் அகில இந்திய அரசாங்கக் கூட்டங்களில் நாம் இடர்ப்படுவோம். இந்தியைக் கற்றுகொள்ள வேண்டுவது அவசியம் தான். அரசியல் விஷயங்களில் ஈடுபட வேண்டுபவர்களெல்லாம் இதைக் கற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அதைக் கட்டாயபாடமாகச் செய்வதில் தாய் பாஷைகளுக்கு மிகுந்த இடையூறு ஏற்படுமாகையால் இஷ்டமிருந்தால் படிக்கும் பாடமாகச் செய்து பலரைப் படிக்கும்படி தூண்டுவதுதான் முறையாகுமென்று நான் நினைக்கிறேன். இந்தி படிப்பவர்களுக்குச் சன்மானங்களும் பரிசுகளும் மற்றும் பலவழிகளில்

ஊக்கமும் கொடுக்கலாம். அப்படி இந்திபாஷை கட்டாய பாடமாக்கப்படுமென்று உறுதிசெய்ய வேண்டுமானல், தாய்ப் பாஷைகளையும் அவ்வாறே செய்யவேண்டும். தாய்ப்பாஷைகள் இதுகாறும் கட்டாய பாடங்களாக வைக்கப்படவில்லை. தமிழை வாசியாமலே ஒருவன் சர்வகலா பரிக்ஷைகள் எல்லா வற்றிலும் தேருதல் அடையலாம். மேலும் நான் மற்றோரி டத்தில் சொன்னது போல அடிமுதல் நுனிவரையில் ஆரம்ப வகுப்பு முதல் சர்வகலா சாலை உயர் வகுப்புவரையில் எப்பொருளையும் சொல்லித்தருவது தாய்ப் பாஷையின் மூல மாய் என்று விதி ஏற்படுத்த வேண்டும்.

நண்பர்களே! இதுகாறும் என் பேச்சுக்களைப் பொறுமை யோடு கேட்ட உங்களுக்கும், என்னை இவ்விடத்தில் நிறுத் திப் பேசும்படி செய்த சமாஜத்தின் செயலாளர்களுக்கும் ஸ்ரீ கணபதி விலாச சபையினர்களுக்கும் என் நன்றியைச் சொல்லிச் சைவசமயம் எப்போதும் தழைத்திருக்க எல்லாம் வல்ல இறைவனை அருள்புரியப் பிரார்த்தித்து எனது பேச்சை நிறுத்திக் கொள்கின்றேன்.

---


# பெரிய புராணம்

**செந்தில்வேல் முதலியார் பதிப்பு**

**ராயல் அளவு முழு கலிக்கோ பைண்டு**

**ஒவ்வொரு புராணத்தின் இறுதியில் வசனமும் சேர்க்கப்பட்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| பிரதி ஒன்றின் விலை | ரூ. 1 6 0 | தபாற் கூலி வேறு. |
| ஆறு பிரதிகள் | ,, ,, 7 8 0 | |

**கிடைக்குமிடம் :—**

சைவசித்தாந்த மகாசமாஜம்,

"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத்தெரு, மயிலாப்பூர், சென்னை.

# தமிழும் ஹிந்தியும்*

[எஸ். சோமசுந்தர பாரதியார்]

புதிய அரசியலாட்சி விழா தமிழ் நாட்டில் ஹிந்தி வழிபாட்டின் கொடியேற்றத்துடன் துவங்குமென்று கனம் முதன் மந்திரியவர்களின் ஆணைப் பறை முழங்குகின்றது. சென்னை இராமகிருஷ்ண மடத்தில் முதன் முதல் கனம் மந்திரியவர்கள் வெளிப்படுத்தியபோது அவர்கள் கூறியதன் சுருக்கம் இதுவாகும்:—

"இந்தியருக்கு ஒரு பொது மொழிப் பயிற்சி இன்றியமையாதது. அதனால் ஹிந்தியைப் பள்ளிச் சாலைகளில் இளம் பருவத்தில் பிள்ளைகளைப் பயிலப்பண்ணுதல் வேண்டும். இப்போது அதற்குரிய அதிகாரம் நம் கையிலிருக்கிறது. ஆகையால் விரைவில் அதைச் செய்வோம்"

"காங்கரஸ் ஆதிக்கம் மக்களின் உரிமைகளை யோம்பி வளர்க்கும். மக்களை வற்புறுத்துங் கட்டுப்பாடுகளை நெகிழ்க்கும்" என்று காங்கரஸ் தலைவர்கள் சொன்னார்கள்; இன்னுஞ் சொல்லி வருகிறார்கள். தமிழ்நாட்டுப் பள்ளிகளில் அந்நாட்டவரின் தாய்மொழியாகிய தமிழ் இன்னும் கட்டாய பாடம் ஆக்கப்படவில்லை. இந்நிலையில் தமிழ்ப் பிள்ளைகளெல்லாரும் இளம் பருவத்தில் தங்களுக்கு அந்நிய மொழியாகிய ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் பயின்றே தீரவேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் காங்கரஸ் மந்திரிகள் ஏற்படுத்துவது

[*அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகிய திரு. பாரதியார் அவர்கள் தமிழ்நாடெங்கும் சென்று பிரசாரம்செய்து வருவது நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகிறது. அவர்களுடைய நன்முயற்சி வெற்றி பெறுவதாக.]—பத்திராசிரியர்.

உரிமை நலம் ஓம்புவதாகுமா? தமிழரின் தாய்மொழி வளர்ப்பதற்கு இக்கட்டுப்பாடு இன்றியமையாததா? ஒருகால் அரசியற்றுறையில் ஹிந்தியை இந்தியருக்குப் பொது மொழியாகக் கொள்ளுதல் விரும்பத் தக்கதாமெனினும், அதை விருப்பப் பாடமாகப் பயிலவிட்டு அதைக் கற்கும் விருப்பத்தை வளர்க்க முயல்வது பொருத்தமாகலாம். அதைவிட்டுச் சிறு பருவத்தே பள்ளிபுகும் பிள்ளைகளெல்லாம் தமிழைக் கற்பினும் கற்காவிடினும் கட்டாயமாய் ஹிந்தி படித்துத் தீரவேண்டும் என்று விதிப்பது முறையன்று.

ஹிந்தி தமிழரேல்லோருக்கும் அவசியமன்று. தங்கள் நாட்டுக்கு வெளியே தமிழறியாதாரிடம் பழக விரும்புவோருக்கு விரும்புங்கால இட வாய்ப்புகளுக்கேற்பத் தங்கள் அவசியத் தளவு அப்பொதுமொழிப் பயிற்சி மேற்கொள்ளுத வியல்பாகும். அதற்குமேல் ஹிந்தியின் உதவி வேண்டாதவரும், வெளிநாட்டுப் பழக்கத்திற்கு என்றும் அவசியம் நேராதவருமான எல்லோரும், ஹிந்தி பயின்று தீரவேண்டுமென்பது யார் நன்மை கருதியதாகுமென்று இதுவரை எந்த மந்திரியும் எங்கும் தெளியவுரைத்தாரில்லை. ஹிந்தியைக் கட்டாய பாடமாகக் கற்பிப்பதனுல் என்ன கெடுதியென்று மற்றவர்களைச் சொல்லும்படி மந்திரி வகுப்பினர் வற்புறுத்துகிறுர்கள். முதலில் கெடுதி பிறிதில்லையெனினும் ஹிந்திப் பயிற்சியை எல்லோருக்கும் கட்டாய பாடமாக்கத் தக்க காரணங் காட்டுவது அதைச் செய்ய விரும்பும் மந்திரிகளின் கடமையாகும். ஹிந்திப் பயிற்சி எல்லோருக்கும் இன்றியமையாததென்று காட்டும்வரை அதைக் கட்டாய பாடமாக்குவது வரம்பிகந்த தவறுகும்.

தமிழ் மொழிக்கும், தமிழர் கலையுணர்வு நாகரிக உணர்ச்சிகளுக்கும், இளம் பருவத்தில் அந்நிய மொழியொன்றைப் பயிலும் பொறுப்பைச் சுமத்துவதே முதற் கெடுதியாகும்.

"தாய்மொழியில் எல்லாப் பாடங்களுங் கற்பிக்கப்படவேண்டும். எவ்வித உயர்ந்த கலைப் பட்டத்திற்கும் தமிழ்மொழியொன்றே போதுமானதாக ஆக்கப்படவேண்டும்' என்று அறிவுடையோ ரெல்லாரும் சொன்னார்கள்; சொல்லி வருகிறார்கள். நாட்டு நலத்திற்கும் நாட்டவர் வளத்திற்கும் யாண்டும் எக்காலத்தும் தாய்மொழிப் பயிற்சியே தக்கதென்பது மறுக்கொணா வுண்மை. நூல் வளமற்ற புதிய மொழிகளைக் கூட வளப்படுத்தி வளர்ப்பதே அறமென்று நாகரிக மக்களெல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். தமிழோ மிகப் பழமையானதும் எண்ணிறந்த சிறந்த நூல்களின் வளத்தால் செழுமையுடையதுமான செம்மொழி என்பதை முதன் மந்திரியவர்களே ஒப்புக்கொண்டு பேசிவருகிறார்கள். எந்தத் துறையிலும் முன்னேற்றத்திற்குத் தமிழ் போதாதென்பது தன் கருத்தென்று அவர்கள் கூறவுமில்லை. ஹிந்தி எவ்வகையினும் தமிழை ஒப்பதும் மிக்கதும் அன்றென்றும் அங்கீகரிக்கிறார்கள். தமிழறியாத பிற நாடுகளில் பழகுவதற்குப் பொது மொழியாக ஹிந்தி உதவக்கூடுமென்ற ஒரு காரணந் தான் ஹிந்தியின் சார்பாக இதுவரை கூறப்படுகிறது. இதற்காக ஹிந்தியை எல்லாருக்கும் கட்டாய பாடமாக்க எவ்வித நியாயமும் அவசியமும் ஏற்படமாட்டா. அதற்கு மாறாகத் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழர் கலையுணர்ச்சிக்கும் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவது சிறிது இடையூறு செய்யவுங் கூடும். ஒன்று முதல் மூன்று பாரம்வரை ஹிந்தியை வற்புறுத்திக் கற்பிக்கப் போவதாய்த் தாம் துணிந்து விட்டதாகக் கனம் முதன் மந்திரியவர்கள் மாம்பலத்தில் கல்வித்துறை முற்றிய புலவர் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். இது சில தினங்களுக்குமுன் அவர்களே தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் கூறியதற்குச் சிறிது மாறுபடுகின்றது. அக்கல்லூரி யுபந்நி

யாசத்தில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குந் தம் கருத்தை விரைந்து தாம் நிறைவேற்றப்போவதில்லையென்றும், கல்வித்துறை வல்லாரோடு கலந்து அவர்கள் ஆதரவு பெறுவிடில் தம் கருத்தைத் தாம் மாற்றிக் கொள்ளவுந் தயாரென்றும் கனம் மந்திரியவர்கள் தெரிவித்தார்கள். தம் கருத்தை மறுத்த தமிழரைச் சாந்தி பண்ணுவதற்காக அவ்வாறு தெளியக் கூறித்தேற்றிய முதன் மந்திரியவர்களே தாம் அழைத்த திரு. சாரநாதையங்காரவர்கள் போன்ற தலைசிறந்த தேசப்பற்றுடைய பலதுறைப் புலவர்கள் தம் கருத்தை ஆதரியாததறிந்தும் தாம் முதலிற் கருதியபடியே செய்து விளையும் பயனைச் சோதிக்கத் துணிந்திருப்பதாக மாம்பலத்தில்முடிவு கூறிவிட்டார்கள். அவர்கள் கூறும் வகுப்புக்களில் தாய்மொழிக் கல்வியில் சிறுவர்களுக்கு அடிப்படை கூட ஏற்படாதென்பது ஒருதலை. ஓரளவேனும் தமிழறிவு இளைஞருக்கு நிலைபெறுமுன் அந்நிய மொழிப் பயிற்சியை பிறபாடங்களுடன் அவர்கள் தலையிற் சுமத்துவது அவர்கள் பருவ நிலைக்குப் பரிவில்லாத வன்கண்மையாம். அதுவேயுமன்றித் தமிழ்ப் பயிற்சி இப்பாடச் சுமையால் தளர்வடைவதும் நிச்சயம்.

தமிழுக்கும் ஹிந்தி மொழிக்கும் எழுத்து, சொல், ஓசை இலக்கண அமைதி, நடைமுறை, கொள்கை, பொருளாக்கம் முதலிய ஒவ்வொரு துறையிலும் உடன்பாடில்லாமையோடு வேறுபாடுகள் மிக மலிந்துள்ளன. தாய்மொழிப் பயிற்சி நிரம்பியபிறகு அதன் திட்டமும் அதனுடனொத்து நோக்கும் அறிவின் ஒட்பமும் துணையாக்கொண்டு பிற மொழி பயில்வது எளியதாவதோடு இன்பமுந் தருவதாகும். நிலைபெற்ற தாய்மொழிக் கலையறிவிற்குக் கேடின்றிப் பிறமொழியறிவு மொழியை வளம்படுத்த உதவவுங்கூடும். ஒவ்வொரு மக்களின் நாகரிகத்துக்கும் அவர்கள் தாய்மொழியே பற்றுக்கோடும் பயனுமாயமையும் என்பது மறுக்கொணு வுலகறிந்த

செய்தியாகும். தமிழரோ இந்தியமக்களின் வகுப்புக்களின் தனிவேறு பட்ட நாகரிகம் தொன்று தொட்டு மேற்கொண்டு கையாண்டு வருபவராவர். ஹிந்தியோ இலக்கணம், சொல்லியல்பு முதலிய ஒவ்வொன்றிலும் தமிழின் வேறு பட்டு, வட மொழித் தொடர்பும் வட நாட்டு நாகரிகச் செறிவும் உடையதொரு மொழியாகும். தமிழ்ப் பிள்ளைகள் தங்கள் தாய் மொழியில் கல்வி நிரம்புமுன் எல்லா வகையானுந் தமிழுக்கு வேறுபட்டதும், தமிழருக்கு அந்நிய மொழியானதுமான ஹிந்தியைக் கட்டாய பாடமாகக் கற்க நேரின், தமிழ்ப் பயிற்சியும் தமிழ்க்கலை யுணர்வும் வேரூன்றித் தழைவதற்கு மாறுகப் பிற மொழிவேரும் நிழலுந் தட்டித் தளர்வு படுமென்பது விவகரியாமலே யாவரும் எளிதி லறியத்தக்க வுண்மையாகும். தாய்மொழிக் கல்வி நிறைந்த பிறகு அதை வளப்படுத்தக் கூடிய பிறமொழிப் பயிற்சி, முதிராத் தமிழ் முளையைக் கதிர்தரும் பயிராக வளரவிடாமல் தடுக்குங் களையாகி முடியுமென்பதை யறியாதார் மொழிக்கலை யியல்பையே யறியாதாராதல் வேண்டும்.

இனி, சிறு பிள்ளைகளுக்கு ஹிந்தி படிப்பதால் சுமை அதிகப் படுமென்பது ஒப்புக்கொள்ளப் படுகிறது. எனில், அந்த அதிகச் சுமையை இப்போதவர்கள் படித்து வரும் வேறு சில பாடங்களை நிறுத்துவதால் குறைத்து விடுவதாய் மந்திரிகள் பேசுகிறார்கள். பொதுவாகக் கல்வி அறிவு வளர்ச்சியை முக்கிய நோக்கமாகக் கொண்டுடையது மொழிப் பயிற்சி. அஃது அறிவை ஊட்டுவதற்கும், ஊட்டப் பெற்ற அறிவு பயன் படுதற்கும் கருவியாகும். எனவே, அறிவுதரும் பாடங்களைக் குறைத்தாவது வேறு ஒரு அந்நிய மொழியையுஞ் சிறுவரைப் பயிலப் பண்ணுவது, அவர்கள் கல்வியையே குறைப்பதாக முடியும். அன்றியும் தாய் மொழியல்லாத பிறமொழிப் பயிற்சி தன்னளவில் இளைஞ

ருக்கு இன்ப மற்றதும் வருத்தம் தருவதுமாகும். தமிழ்ப் பிள்ளைகளுக்கு இக்கெடுதிகளுக்கிடமான ஹிந்திக் கட்டாயப் படிப்பு எதற்காக வேண்டப்படுகிறது ?.

இனி, இதுவரை ஆங்கிலம் அந்நியமொழியா யிருந்தும் பயிற்றப்பட்டதே! அதற்குப் பதிலாகத்தானே ஹிந்தி வரப் போகிறது. அதனால் புதிதாகப் பெருங்கேடு எதுவுமிரா தென்கிறார்கள். ஆங்கிலப்படிப்பு எல்லாச் சிறுவருக்கும் கட்டாய பாடமாயிருப்பது தவறென்று இதுவரை நாட்டில் எல்லாத் தலைவர்களும் போராடினார்கள். இப்போதும் ஆங்கிலத்தை விருப்ப பாடமாக்கிவிடுவதாகச் சொல்லுவதும் இதுவரை அது கட்டாய பாடமாயிருந்தது பிசகென்பதை விசதமாக்கும். நாட்டு மொழிகளிலில்லாத பிற அறிவு நூல்களைக் கற்பிக்க உபயோகப்பட்ட ஆங்கிலமே அவசியமில்லை யெனவும், தாய்மொழிகளிலேயே எல்லாக் கலையறிவும் தரவேண்டுமெனவும் ஒப்புக் கொள்ளப்படு மிக்காலத்தில் தமிழில் இல்லாத நலமெதுவு மில்லாத ஹிந்தியைத் தமிழ்ச் சிறுவரெல்லாரையும் வருந்திப் பயிலப் பண்ணுதல் தவறினும் பெருந் தவறாக வன்றோ முடியும்? பிறநாட்டுப் பழக்கத்துக்கு ஹிந்தி பயன்படு மதனால் அதைப் பயிலப் பண்ணுதல் அரசிய லதிகாரிகளுக்கு அவசிய மென்கிறார்கள். இது சிறிதும் பொருந்தாது. முதலில் ஹிந்தியை இந்தியரெல்லாரும் பொது மொழியாக ஒப்புக்கொள்வார்களா என்பதே இன்னுந் தெளியப்படாதது. ஹிந்தி பல மாகாணங்களில் நடைபெறுவதாகப் பேசுவதும் பிசகு. ஹிந்தி வட நாட்டில் கூடப் பல வேறு பகுதிகளில் வேறுபட்ட பல வுருவங்களையும் பேர்களையும் கொண்டுடையது. ஒரு கிளைமொழி பேசுவோர் பிற கிளைப்பேச்சை எளிதில் அறியக் கூடாமலிருக்கிறார்கள். அன்றியும் வங்காள முதலிய வட நாட்டு மொழிகள் ஹிந்திக்கு மிகவும் வேறுபட்டன. அதனால் ஒருவித ஹிந்தியைக் கற்றத

னால் நாம் இந்தியா முழுதும் அறியப்படும் பொதுமொழியுடையவராகி விடமுடியாது. ஒருகால் அவ்வாறு எல்லாப் பகுதியினரும் ஒருவகை ஹிந்தியைப் பயின்று பேசுவதாக ஏற்படினும், அப்பயிற்சி விரும்புபவருக்கு விருப்ப பாடமாகலாமே தவிர, எல்லாருக்கும் கட்டாய பாடமாக்கப்படக் காரணமில்லை. நல்லதெல்லாம் கட்டாயப் படுத்தப்பட வேண்டுமா? எல்லாம் கட்டாயமாக வற்புறுத்தப்படுவது மக்கள் உரிமை நாகரிக உணர்ச்சிகளுக்குப் பொருந்தாத அநாகரிக அரசியற் கொடுமையாகு மல்லாமல் உரிமை ஓம்பும் அரசியல் முறையாக மாட்டாது.

இறுதியாக, நாட்டில் ஒற்றுமைக் குறைவும் பிளவுணர்ச்சி மாறுபாடுகளும், பேசப்படும் பலமொழிகளாலிதுவரை விளைந்ததில்லையே! சமயப் போராலும் பிற பல காரணங்களாலுமல்லவா சண்டைகளும் சச்சரவுகளும் நிகழ்கின்றன. எல்லாரும் ஒரேமத மேற்கொண்டு தீர வேண்டுமென்று சமாதான நலங்கருதி யாராவது சொல்லத் துணிவார்களா? ஆகையால் ஏதோ சிலருக்குச் சிறிது நலம் வரலா மென்பதற்காக எல்லா இடங்களிலும் எல்லாப் பிள்ளைகளையும் அந்நிய மொழியொன்றைப் பயிலப் பண்ணுவதும் அறிவுக்கும் சரித அநுபவத்துக்கும் பொருந்துவதன்று. பல மொழிகள் பயிலும் நாடுகள் பலவுள - பலமொழி பயின்றவர் சிலருளர் - எனில் இருமொழிகள் ஒரு பெருநாட்டுப் பல மாகாணங்களி லுள்ளார் எல்லாரும் பயின்று தீர வேண்டு மென்னுங் கொடுமை இழைக்கத் துணிந்த வல்லரசு, உலக மக்கள் சரிதத்தில் இதுவரை எங்கும் தோன்றியதில்லை. இவ்வளவு வன்கண்மை காட்டியாவது தமிழ் நாட்டில் ஹிந்தியைக் கட்டாயபாட மாக்குவானேன்? ஹிந்தியைப்போல வடமொழித் தொடர்பு மிக்கனவாய், ஹிந்திக்குச் சிறிது இயலியைபுமுடைய பல பிற மொழிகள் பேசும் மாகாணங்களில் எல்லாம் இன்னும் காங்க

ரஸ் மந்திரிகள் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க முடியாத நிலையில், தமிழ்நாட்டுத் தலைவரான கனம் முதன் மந்திரியும் அவர்களினத்தவரும் தமிழ்நாட்டில் ஹிந்தியை இவ்வளவு விரைவாகக் கட்டாய பாடமாக்கத் துணிவானேன்? இது போன்ற சில கேள்விகள் கேட்போருக்கு இதுவரை தக்க விடை தரப்படவில்லை. அதனால், ஹிந்தியை வற்புறுத்து முயற்சி வடமொழிக்கும், அம்மொழியினருடைய நாகரிகத்துக்கும் வேறுபட்ட தமிழைத் தளரப் பண்ணவும், தமிழ் நாகரிகத்தைப் பழிப்பதற்கும் ஏற்ற சூழ்ச்சியெனத் தமிழ் மக்கள் ஐயப்படுதற்கும் இடமுண்டாகிறது. வடமொழியை விடாது பயின்று வரும் ஒரு வகுப்பினருக்கு வடமொழியின் பாகதமான ஹிந்தி பயிலுவது எளிது மினிதுமாயிருக்கும். வடமொழிக்கு முற்றிலும் வேறுபட்ட தமிழ் மொழியுடையாருக்கு அதே காரணத்தால் அத்தமிழுக்குப் புறப்புற அந்நிய மொழியான ஹிந்தி இன்பமற்றதும் இலேசல்லாததுமாகும். இதன் உண்மை வட நாட்டவருள் தமிழைப் பயில முயல்வார் படும் பாட்டால் விளக்கமாகும். ஆகவே அவர் மொழியைத் தமிழர் பயில்வதிலும் அதே வருத்த மேற்படுமென்பது சொல்லவும் வேண்டுமா? இளம் பருவத்தில் இப்பிற மொழிப் பயிற்சியைப் பள்ளிகளில் கட்டாய பாடமாக வற்புறுத்துவது ஒரு சிறு வகுப்பினருக்கு நன்மையும், தமிழ் மக்களுக்குப் பொதுவாக நலக்குறையும் விளைக்குமென்பது வெள்ளிடை மலையேயாகும். இதுவரை ஹிந்தி பயின்றிருப்பவருள் ஒரு வகுப்பினரே மிகப் பலராதலாலும், இம்முயற்சி உடனே பல்லாயிரப் பள்ளிகளில் ஹிந்தி உபாத்தியாயராகப் பதவியும் வேதன உதவியும் பெறுதற்குச் சாதகமாகுமென்பது வெளிப்படை. எனவே இம்முயற்சி தற்போது இந்நாட்டு மக்கள் வகுப்புக்களுள்ளிருந்துவரும் இகல்,

நம்பிக்கையின்மை வேறுபாடுகளைக் குறைப்பதற்கு மாறாக, மேலுமவற்றை வளர்ப்பதாக முடியும்.

இதனினும் கேடு இன்னுமொன்றுளது. தமிழ் மாகாணத்திலேயே இனி என்றும் தமிழ்மட்டும் பயில்பவருக்கு வேலைகிடைப்பதரிது. ஹிந்திப் பயிற்சி யுடையவருக்கே பல நலமும் பல்கும் என்ற கருத்தைக் கனம் முதன் மந்திரியவர்களே வற்புறுத்தி வருகிறார்கள். இஃதொன்றே ஹிந்தியைத் தமிழர் மறுப்பதற்குப் போதுமானதாகும். பிற மாகாணங்களிற் பழகிப் பதவிமுதலியன தேடுவார் செயல் எதுவேனுமாகட்டும். தமிழகத்தில் தமிழருக்குத் தமிழ் மட்டுமே போதுமானதாக இருத்தல் வேண்டும். அதுமட்டுமன்று. தமிழ்மாகாணத் தளவில் அங்குத் தங்கும் பிறமொழியாளர் எல்லாரும் தமிழ்கற்றுத் தீரவேண்டும் எனவற்புறுத்தப் படுவதே முறையும் அறமுமாகும். ஒவ்வொரு மாகாணத்திலும் அம்மாகாணத்தாரின் தாய் மொழி எல்லாருக்கும் பள்ளிகளிலும் பொது மன்றங்களிலும் கட்டாய மொழியாக்கப்படல் வேண்டும்.

இனி, தமிழ் ஆரியமென நாகரிக வேறுபாடு கிடையாதென்பார் உண்மையுரைப்பவராகார். நாகரிகம் மொழி இயல்பு கலையுணர்வுகளால் வடவாரியரும் தென் தமிழரும் தொன்று தொட்டு மாறுபாடின்றி வேறுபட்டவராகவே இருந்து வருவது உலகறிந்த சரிதவுண்மை. அவ்வேறுபாடுகளை மறுப்பதுபொய்; மறைப்பது முடியாதாகும். அழித்தொன்றாக்க முயல்வதோ பகைவளர்ச்சியும் கொடுமையுமாகி முடியும். ஒவ்வொரு மக்கள் வகுப்பினரும் தத்தம் நாகரிகம், கலையுணர்வு, மொழி ஏற்றங்களை ஓம்பி வளர்த்து உலகச் செல்வத்தை நிறைப்பதுவே முறைமையாகும். இதற்கு மாறாக அந்நிய மொழிப் பயிற்சியை வற்புறுத்தித் தமிழாது

பழைய நாகரிகத்தையழிக்கு முயற்சியை எதிர்ப்பது தமிழ ரனைவருக்கும் தலையறமாகும்.

மக்கள் வகுப்பினருள் ஒற்றுமைநலம் விலையற்றதே. எனில், வேறுபாடெதுவுமில்லாத ஒற்றுமையினை வளர்க்க முயல்வது விழலுக்கிறைக்கும் நீராகும். ஒவ்வொரு வகுப் பினரின் உடைமை உரிமைகளை மற்ற வகுப்பினர் மதித்துப் பாராட்டுவதால், எல்லார்க்கும் நட்பும் ஒற்றுமையும் செழித் துவளரும். முகமன்பேசி முடிதுளக்கி, அடியறுத்துக் குடி கெடுக்கும் சூழ்ச்சிகள் அருவருப்பும் அறவெறுப்பு மூட்டிப் பகையொடு பலகேடுகளையும் விளைப்பனவாம். ஆகவே தமி ழகத்தில் தமிழை எல்லாருக்கும் முதலில் கட்டாய பாட மாக்குவதொன்றே அரசியலார் கடமையாகும். அந்நியமொழி எதுவே ஆயினும் அதற்கு ஆதிக்கமும் நிலைக்களமும் உதவு வது தமிழர் நலக்கேடு சூழும் பாவமும் பழியுமாகும்.

# பெங்களூரில் சமாஜ மகாநாடு

[அ. மு. பரமசிவாநந்தம்]

இம்மகாநாடு மிகச் சிறப்பாக 17, 18, 19-9-37 ஆகிய மூன்று நாட்களில் நடைபெற்றது. முதல்நாட் காலையில் சமா ஜத்தினர் சிவபுராண பாராயணத்துடன் சென்று கணபதி விலாச சபையை அடைந்து, விநாயகரை வணங்கினர்; பிறகு சுப்பிரமணியர் ஆலயத்தை அடைந்தனர். இறைவழி பாட் டிற்குமுன் திருநெல்வேலி சுந்தர ஓதுவார் மூர்த்திகள் இனிய தேவாரங்கள் பாடினர். இறைவழிபாடு நடைபெற்றது. பிறகு சுந்தரர் நாடகம் வெளியிடப் பட்டது. அவ்வெளியீட் டுக் கூட்டத்திற்குச் சமாஜத் தலைவர், தூத்துக்குடி. திரு. சிவ

குருநாதப் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தனர். தலைவர் முன்னுரையின்பின் திரு. சச்சிதாநந்தம்பிள்ளை அவர்களும், பெருஞ்சொற் கொண்டல் திரு. புரிசை. முருகேச முதலியார் அவர்களும் தற்காலத்திற்கு நாடகம் வேண்டிய அவசியத்தைப் பற்றியும், நாடக ஆசிரியர் சைவ இளைஞர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்களது பணியைப் பற்றியும் கூறி அவர்கள் மேன்மேல் இத்தகைய தொண்டில் ஈடுபட்டு உயர வேண்டுமென ஆசி கூறினர். பிறகு நூலாசிரியர் சில சொற்கள் சொன்னபிறகு தலைவர் முடிவுரையாகச் சில சொற்கள் சொல்லி, நூலாசிரியரையும் ஆசீர்வதித்தனர். கடைசியில் சமாஜக் காரியதரிசி அனைவர்க்கும் நன்றிகூற 11½ மணிக்கு வாழ்த்துடன் கூட்டம் கலைந்தது.

அன்று மாலை 4 மணிக்கு கேவல்ரி ரோட்டிலுள்ள. திருவாளர். எ. தேவராச முதலியார் அவர்கள் வீட்டிலிருந்து தலைவர்களை இன்னிசை வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வந்தபின், யாவரும் சபா மண்டபத்தை அடைந்தனர். ஆரம்பத்தே, திரு. சுந்தர ஓதுவார் மூர்த்திகள் இன்னிசை இசைத்தபின் திரு. சிவகுருநாதபிள்ளை அவர்கள் இச் சைவ மகாநாட்டிற்குத் திரு.தெய்வசிகாமணி முதலியார் அவர்களைத் தலைமை வகிக்க முன் மொழிந்தனர். திரு. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் வழிமொழிந்தபின் தலைவர் தம் தலைமை இடம் அடைந்தார். பிறகு, விலாரிபட்டு வேணுகோபால முதலியார் அவர்கள் திரு-புழலை திருநாவுக்கரசு முதலியாரியற்றிய வரவேற்புக் கவியை வாசித்தனர். பிறகு தலைவர் தலைமைஉரை நிகழ்த்தினர். (இதை மற்றோரிடத்தில் காண்க) பிறகு 'நவசக்தி' பத்திராசிரியர் - திருவாளர். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் 'சகோதர நேயம்' என்பதுபற்றிப் பேசும்பொழுது, உயிர்களிலெல்லாம் இறைவன் உள்ளானாதலின் அவைகளை ஒத்து நோக்கின்

சகோதர நேயம் உண்டாகுமெனவும், உலக சகோதர நேயம் உண்டாக வேண்டுமெனவும், அதற்கு உறுதுணையாகவே உலக யுத்தம் ஏற்படப் போகின்றதெனவும், அந்தயுத்தத்திற்குப்பின் உலகமெங்கும் சமாதானம் நிலவு மெனவும், உலகத்திலே தற்போது ஆட்சி கொள்ளும் பணக்காரரும் பாதிரிகளும் நீங்கினாலன்றி நாட்டில் சகோதர நேயம் உண்மையாக நிலவாதெனவும், எனவே சகோதர நேயம் பரவ வேண்டுமாயின் இத்தகைய குறைகளை நீக்கவேண்டுமெனவும், ஆலயம் முதலியவற்றிலே அனைவர்க்கும் சம உரிமை அளிக்க வேண்டுமெனவும், எவ்வாறாயினும் இன்னும் சில ஆண்டுகளில் உலகில் சகோதரநேயம் நிலவுமெனவும் கூறிமுடித்தார். தலைவர் இச் சொற்பொழிவைப்பற்றிச் சில குறிப்புகள் கூறிய பின்னர் பெருஞ்சொற் கொண்டல். திரு. புரிசை. முருகேச முதலியார் அவர்கள் 'மாம்பழம் வருவித்த மாதரசி' என்பதைப் பற்றி இனிமையுற விளக்கி உரைத்தனர். தலைவர் கருத்துரைக்குப் பின் முதல் நாள் கூட்டம் 8 - 45 மணிக்குக் கலைந்தது. இரண்டாம் நாள் காலை 8 - 30 மணிக்கு இளைஞர் மகாநாடு கூடிற்று. தலைவர் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களைத் தலைமையேற்குமாறு வித்துவான். அ.மு. பரமசிவாநந்தம் அவர்கள் முன்மொழிய, விலாரிப்பட்டு - வேணுகோபால் முதலியார் அவர்கள் பின்மொழிந்தனர். தலைவர், தலைமை யேற்றபின் தமது தலைமையுரையை நிகழ்த்தினர். பிறகு தமிழ் நாட்டில் 'ஹிந்தி'யைக் கட்டாய பாடமாக்குதலை எதிர்த்து ஒரு தீர்மானம் வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் அவர்களால் கொண்டுவரப்பட்டது. அதைச் சேலம் மாணிக்கஞ் செட்டியாரவர்கள் வழிமொழிந்தனர். இத்தீர்மானம் சபையில், ஒரேமுகமாக நிறைவேறிற்று. பிறகு, திருமதி. நீலாவதி அம்மையார் அவர்கள் "மாதர்கள் நிலைமை' என்பது பற்றியும், புரிசை. திரு. முரு

கேச முதலியார் அவர்கள் 'அப்பரை வழிபட்ட அந்தணர்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின் வித்துவான் அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறக் கூட்டம் 12 மணிக்கு நிறைவேறிற்று.

மாலை 5 மணிக்குச் சைவர் மகாநாடு தொடக்கமாயிற்று. தலைவர் முன்னுரை மொழிந்தபின் திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் 'மெய்கண்டார்' என்பதுபற்றி அரும்பெரும் பொருள்களை ஆராய்ச்சியுடன் விளங்க உரைத்தனர். பிறகு பண்டிதமணி திரு-மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் 'திருவாசகத்தில் காணப்பெறும் சித்தாந்த உண்மைகள்' என்பது பற்றி 'பரசிவன் சேர்ந்தறியாக்கையான்' என்று இறைவன் தலைமைத் தன்மையைப் பற்றியும், மாணிக்க வாசகர் ஐம்புலச் சேர்க்கையில் ஆழ்ந்துநின்று கூறியதைப்பற்றியும், அன்பர்க்கு வேண்டுவது பணிசெய்தலே என்பதுபற்றியும், சரியை, கிரியை முதலிய படிகளை மாணிக்கவாசகர் கூறியதைப்பற்றியும், இறைவன் அருளாரமுதத்தை வாரி அள்ளி வழங்க விழுங்கிவிக்கி நிற்பதால் இறைவன் தேனன்ன தண்ணீர் பருகத் தரவேண்டுமென்று கூறியதைப்பற்றியும் விளக்கி உரைத்தனர். பிறகு திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள் 'திருக்குறள் ஆராய்ச்சி' என்பதுபற்றி வள்ளுவர் குறளுக்கு உரையாசிரியர்கள் இடர்ப்பட்ட சிலவற்றிற்கு அழகாக விளக்கமுறப் பொருள் உரைத்து மக்களை மகிழ்வித்தனர். மணி 8-45 ஆயினமையின் தலைவர் தம் கருத்துரையை மறுநாள் முடிவுரையோடு சேர்த்துக்கொள்வதாகக் கூறிக் கூட்டத்தை முடித்தனர்.

மூன்றும் நாள் காலை 9 மணிக்குச் சமாஜ மகாநாடு ஆரம்பமாயிற்று. தலைவர் முன்னுரைக்குப்பின், திரு-தணிகை நிர்மலானந்த வேதாசல சுவாமிகள் 'ஐந்தெழுத்துண்மை' என்பது பற்றியும், அதன் பின்னர் தூத்துக்குடி சைவசித்தாந்தப் போதக ஆசிரியரும், சமாஜ ஆண்டுத் தலைவருமாகிய திரு. சிவகுருநாதப்பிள்ளை அவர்கள் 'சிவஞானபோதச் சிறப்பு' என்பதுபற்றியும் தெள்ளத்தெளிய உரைத்தனர். 11 - 30

மணிக்குத் தலைவர் கருத்துரைக்குப்பின் கூட்டம் முடிவுற்றது. பிற்பகல் இரண்டுமணிக்கு மங்கையர் பெருங்கூட்டமொன்று இம்மகாநாட்டின் சார்பில் நடைபெற்றது. அதற்கு, திருமதி. கஜாம்பாளம்மாள் அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவியார் முன்னுரையாகச் சில சொற்கள் மொழிந்த பின்பு, திருமதி. பி. சானகிஅம்மாள், மிஸஸ் சுப்பிரமணியம், வீ. திலகவதி அம்மாள், லீலாவதி அம்மாள் முதலியோர் சில சில நிமிடங்கள் சொற்பொழிவாற்றினர். தலைமை ஏற்ற அம்மையார் கூறிய முடிவுரைக்குப்பின் கூட்டம் 4-30-க்குக் கலைந்தது.

பிறகு சமாஜ சார்பில் வந்த அனைவரும் அடங்கிய புகைப்படம் ஒன்று எடுக்கப்பட்டது.

பின்னர் 5-30 மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று தலைவர் முன்னுரை கூறின பிறகு, சமாஜக் காரியதரிசி உடனே சென்னைக்குப் புறப்படவேண்டி இருந்தமையின் முதலில் அனைவருக்கும் நன்றி செலுத்தினர். தலைவர்க்கும் சொற்பொழிவாளருக்கும், இன்னிசை பாடிய திருநெல்வேலி சுந்தர ஓதுவார் அவர்கட்கும் நன்றி கூறியபின், இச்சைவர் மகாநாட்டைச் சிறப்புற பெங்களூரில் நடத்தி வைத்த குகன் பிரஸ் உரிமையாளர், திருவளர் இரத்தினசபாபதி முதலியார் அவர்களுக்கும், அவருடன் ஒருங்கு உழைத்த அவர் மனைவியார் உறவினர்களுக்கும் நன்றி கூறினர். பின்னர் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் 'தற்காலக்கேள்விகள்' என்பது பற்றியும், பெங்களூர் B. G. இராஜகோபால முதலியார் அவர்கள் 'தொண்டு' என்பது பற்றியும் விளக்கி உரைத்தனர். வரவேற்புக்கழகத்தின் சார்பாகத் திரு. வேணுகோபால் முதலியார் அவர்கள் சமாஜத்திற்கும், மற்றவர்க்கும் நன்றி கூறினர். தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் 10 மணிக்கு இனிது நிறைவேறிற்று.

இந்த மூன்று நாட்களும் இடையிடையே, திருநெல்வேலி சுந்தர ஓதுவார் மூர்த்திகள் இசைவிருந்தளித்து மக்களை மகிழ்வித்தமை போற்றற்குரித்து.

பெங்களூர் 32-வது சைவர் மகாநாட்டுத் தலைவர்

# நல்வரவேற்பு

[குகஸ்ரீ புழலை-திருநாவுக்கரசு முதலியாரவர்கள் இயற்றியது]

பூண்டயங்கு மென்மடவார்வலம்வரும்பொற்கோயிலமர் புகழ்மிக்கார்ந்
சேண்டயங்கு மணிமாட நிறைவீதி யலங்காரச் சிறப்புற்றோங்கும் [த
காண்டகுசீர் பாலிவயப் பெருக்கதனா லுலகூட்டுங் கவின்சேர்வாச
மாண்டயங்குந் தொண்டைவள நாட்டிலுயர் மகிமைதவழ் மணவூர்
[கோட்டம்

முற்கோலி வந்தடிமைத் திறங்காட்டி யாட்கொண்ட முன்னோற்கான
சொற்கோவி னினைவகலாச் சிவசமயத் துறைவிளங்கத் துரியாதீதப்
பொற்கோலங் காட்டிமகிழ் வித்தமணி வாசகர்சொற் புகலியர்கோன்
நற்கோலங் கண்டுபணிந் திறைஞ்சுபுவிற் கோலநகர் நலமிக்கார்ந்த.

அன்னகருக் கணித்தாகு மணிவயல்சூழ் கீழ்ச்சேரி யருந்தவத்தன்
நன்னயமா ராங்கிலமு மொழிக்குமொழி தித்திக்கு நலங்கிளர்மெய்
சொன்னயமா ரினியதமிழ் மணங்கமழூம் பத்திநிறை தூய்மையாளன்
மன்னருங்கண் டுவக்கவருந் **தேய்வசிகா மணிப்**பெயர்கொள் மகிப
[னெங்கோன்.

செல்வமலி யுழுதுண்ணும்வே ளாண்மரபிற் குரியதொரு செயற்குவந்த
கல்வியறி வடக்கமுய ரொழுக்கமிகு மதிவிரத கனதனத்துப்
பல்விதக்கூட் டுறவுநிரு வாகமமர் தொழிலினதி பதியாய் நின்று
நல்வினையின்பகுதியினால்திவான்பகதூர்பட்டமதைநல்கப்பெற்றான்

மன்னுமுப காரச்சம் பளம்பெற்று வருமகிபன் மகிழ்மீக்கூர
பன்னுபுக ழோடினிய இல்லறநற் றருமமதின் பரிவிற்கேற்ப
தென்னவுநன் கியற்றவல்ல பேராற்ற லுறும்வலவ னிறும்பூதெய்த
நன்னலமார் முருகனருட் குவந்தபெருமகிழ்ச்சி பெறுநன்மையாளன்.

மன்னியசுத் தாத்துவித வுயர்சைவ சித்தாந்த மகாசமாசர் [கொண்டு
துன்னுமுப்பா னிரண்டாண்டு மகாநாடு நடைபெறுவான் துணையாக்
உன்னரிய **பெங்களூர் கணபதிவி லாசசபை** யுரிமைபூண்ட
பன்னுமா தரவில்வை சியவன்ன சாலைமண்ட பத்துவாரீர்.

இட்டமுடன் மிகச்சிறக்கத் தேர்ந்தெடுக்குமியல்புடைய இராசாங்கத்
சட்டநிரூ பணமன்றத் துயரியவங் கத்தினராந் தகைமைசான்ற [துச்
திட்டமுறுநின தரியசொற்பொழிவைநிகழ்த்துமருந்திகழ்மெய்ஞ்ஞான
மட்டங்கா தினிதூட்டத் தலைமைவகித் தெமைபுரக்க வாரீர் ! வாரீர் !

வாழ்க சிவசமய மாமனுநீ றக்கமணி
வாழ்க திருத்தொண்டர் வாழ்கதமிழ்—வாழ்கநனி
கற்றுணர் வைநல்குங் கவின்சைவ சித்தாந்த
உற்றசமா சம்வாழ்க வோர்ந்து.

## இளைஞர் மகாநாட்டுத் தலைவர்

# நல்வரவேற்பு

[குகஸ்ரீ புழலை திருநாவுக்கரசு முதலியாரவர்கள் இயற்றியது]

ஞாலமதின் மிகச்சிறந்த நற்றெய்வத் திருவருளை நல்கும்வான்றோய்
சீலமுறுஞ் சிற்றுயிருக் குற்றதுணை கல்வியெனுஞ் சீர்சான்மிக்க
சாலமகிழ் விக்குமொரு அதிபதியாய் நிலவிடச்செய் தகைமைசான்ற
காலமதி னன்கூட்டி வளர்த்துநனி பெருமைதருங் கணக்காராய்ந்து.

தானதரு மங்களிலே மேம்படச்செய் வித்யாவ தானமென்னும்
ஆனதொரு நுண்ணறிவின் பயனிதென மதிநுட்ப மாகச்செய்த
ஈனமிலா துயர்தேவா லயதருமா தாயமொடிங் கிறும்பூதெய்த
மானமிகப் பலகலைக்கல் லூரிகளைத் தாபித்த வள்ளலெங்கோன்.

பொன்னவிர்பூம் பொழிலுடுத்த பாலிவயப் பெருக்கதனுற் புகழ்
மிக்கார்ந்த, நன்னலமா ரவ்வைமுனம் வியந்துரைசெய் தொண்டை
வள நாட்டின் மேலாம், பன்னருஞ்சீர் படைத்ததொரு திருக்கச்சி
மாநகரிற் பச்சையப்பன், என்னவுங்கற் றுணரவரு முயர்தரக்கல் லூரி
தனி லெழின்மை பூண்டோன்.

ஆங்கிலமு மருந்தமிழு மிகத்தேர்ந்த செல்வனெனும் அறிவான்மிக்க
பாங்குபெற வுயர்பீஏ பட்டமும்பெற் றதற்கிணங்கப் பலருமேத்தத்
தாங்குபுநல் லாசிரியத் தொழின்முறையில் வலவனெனுந் தன்மை
[வாய்ந்தோன்
ஓங்கிவள ரறிவடக்க மொழுக்கமிகும் வாய்மைசெறி யுறுதியாளன்.

தக்கபுகழ் நற்சைவ சிந்தாந்த மகாசமா சத்துமேலாய்ப்
புக்கமுப்பா னிரண்டாண்டு மகாநாட்டின் சார்பாகப் புகல்வதான
மிக்கதொரு **பெங்களூர் கணபதிவி லாசசபை வியனுதார**
எக்களிப்பா ரிளைஞரது மகாநாட்டுத் தலைமைவகித் திடவேவாரீர்.

அருமைதவ முயர்கங்கை குலமரபி னியல்பனைத்தும் அடைவேநல்கும்
பெருமைதரு மில்வாழ்க்கைக் குரியவெலா நன்கியற்றும் பெருமிதங்
[கொள்
இருமையினு முரிமைதருஞ்சிவபத்தி சிரோமணியென்றியம்பற்கேற்ப
மருவியசற் குணங்களமர் அதிவிரத **வச்சிரவேல்** மகிப வாரீர்.

மன்னு சிவசமய மாமனுநீ றக்கமணி
பன்னு திருத்தொண்டர் பசியதமிழ்—துன்னுபுகழ்
என்னவு நூல்கற்றோ ரொழிற்சைவ சித்தாந்த
உன்னுமவர் வாழ்க வுயர்ந்து.

# சுந்தரர் நாடகம்

[வித்வான் - அ. மு. பரமசிவாநந்தம்]

(மலர் கo - இதழ் - ௬ - ௲அ௦-ம் பக்கத் தொடர்ச்சி)

பிராமணர் :—நான் சொல்வதைத் தட்டாமல் செய்தால் வந்ததைச் சொல்கிறேன்.

பரவை :—என்னால் செய்யக்கூடியதாயின் தடையில்லை. நீர் எடுத்து இயம்பும்.

பிராமணர் :—அவ்வாறாயின் நம்பியாரூரர் இங்கு உன்பால் இவ்விரவு வரவேண்டும். இது உன்னால் ஆகக்கூடிய காரியந்தானே. தடையொன்றும் சொல்லலாகாது.

பரவை :—நன்று சொன்னீர்.

பங்குனித் திருநாளுக்கு பண்டுபோல் வருவா ராகி
இங்கெனைப் பிரிந்து போகி ஒற்றியூர் எய்தி யாங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக் கிங்கொரு சார்வுண் டோநீர்
கங்குலின் வந்து சொன்ன காரியம் அழகி தென்றார்.

(சிறிது கோபமாக) எல்லாம் நானறிவேன். எனைப்பிரிந்து மற்றொருத்தி தோள் அணைந்து மகிழ்ந்தவர்க்கோ நீர் பரிந்து பேசுகின்றீர்? இந்தக் காரியத்தை மேற்கொண்டு நீர் என் தலைவாயிலில் வந்ததும் உம் தகுதிக்குத் தக்கதொன்றாகுமோ? வந்த வழியே போம்.

அந்தணர் :—அவ்வளவுதானே? நான் சென்று வரட்டுமா?

பரவை :—அப்படியே செல்லுங்கள்.

அந்தணர்:—சென்று வருகிறேன் (சீக்கிரம் செல்கின்றார்.)

பரவை:—(சிறிது திகைத்து) ஹா! சென்றவர் மறையவராகக் காணவில்லையே. (தோழியை விளித்து) தோழி! தெருவில் சென்று பார்; அந்தப் பிராமணர் எங்கு செல்கின்றாரென்று.

தோழி :—(தெருவில் சென்று பார்த்து வந்து) அம்மா அவரைக் காணவில்லையே.

பரவை :—ஹா! உண்மையாகவா? காணவில்லையா? சரி, நீ போ. நான் நினைத்தது உண்மையாயிற்று. ஆளுடை முதல்வரே! அங்கயற்கண்ணியோர் பங்கரே! உம்மை இன்னாரென்று அறியாது ஒதுக்கித் தள்ளினேனே! உம் தோழனுக்காக அர்ச்சக வேடங் கொண்டு வந்தும் உம்மை யறியாது வாளாவிருந்தேனே! ஆ! என்னே என் பேதைமை! பேதைமை என்பது மாதர்க்கணிகலம் என்ற சொல்லுக்கிலக் காயினேனே.

(இறைவனுர் தன்முழு உருவத்தோடு வருகின்றார்.) பரவையார் விழுந்து வணங்கி வேண்டுகின்றார்.)

இறைவன் :—பரவையே! உன்னிடம் என் தோழன் அனுப்ப மறுபடியும் வந்தோம். முருகலர் குழலாய்! நீ முன் போல் இன்னும் மறுக்காதே. அவன் பிரிவுற வருந்துகிறான். அவன் இங்கே வரப்பெறல் வேண்டும்.

பரவை:—ஆண்டவ! அம்பலத்தாடல் செய்தாண்டவ! அரவப்பணி பூண்டவ! அடியவர் வேண்டவந்து மறைகாணு பெரும்பாதம் வருந்த இவ்வேழையின் பொருட்டு உழல்வீர் ஆகில் நான் மறுத்துக் கூறுவதும் உண்டோ? தங்களது ஆணைப்படியே—ஆசிப்படியே — அருள்வழிப்படியே வன் றொண்டரை ஏற்றுக்கொள்கிறேன்.

இறைவன்:—உடனே சென்று என் தோழனை அனுப்பு கின்றேன்.

(செல்கின்றார். சிறிது நேரஞ்சென்று சுந்தரர் வர, பரவையார் வீதியில் வந்து கைக்கொண்டு உள்ளே அழைத்துச் செல்கிறார். ஆண்டவனைத் துதிக்கின்றனர்.)

---

அங்கம் 5] [காட்சி 1

## திருப்புன்கூர்

(கலிக்காம நாயனார் தனிமையில் இறைவனை வழிபடுகின்றார்.)

புன்கூர்மேய புண்ணிய! உன்பாத மன்றிப் புகலிட மொன்றில்லாதவனாகி வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உன் அழகிய திருஉருவமேனி கண்டு மகிழ்வதே நான் வேண்டும் பெரும் பேறாகும். நின்புகழ் பேசுவதே நான் வாய் பெற்ற பலன். நின் அடியார் பாடும் மொழி கேட்பதே செவிக்கின்பம். இத்தகைய இன்ப நிலையை ஈந்தருளும் என் இறைவனே! உன் அருள் வழி நின்று ஆட்கொள்ளும். அடியவர் பெருஞ் சிறப்பு நான் அறிய நின்று காட்டி அவர்களையும் வழிபடு முறையில் என்னை ஆக்கிவைத்தருளும்.

(அடியவர் ஒருவர் வருகின்றனர்; எதிர்வணங்கி அழைத்து வந்து உட்காரவைத்து)

கலிக் :—இறைவனது திருமேனிப் பொலிவைப் பல்வேறு இடங்களில் கண்டு தரிசிக்கும் பேறு பெறுவீர். நீவிர் கண்ட இறைவன் கோலங்களையும் அற்புதங்களையும் எனக்கு விளக்க உரைத்தருள வேண்டும்.

அடியவர் :—இறைபணி பூண்ட புனித! நான் கண்ட தலங்கள் பல. அத்துணைத் தலங்களிலும் இறை அழகுப் பொலிவுதனைக் கண்டு சின்னாட்களுக்கு முன் திருவாரூர் அடைந்தேன். அங்கு நடந்த அற்புதந்தான் செப்பொணாத் திறம் வாய்ந்தது.

கலிக் :—ஆ! அப்படியா? என்ன அற்புதம் ஆண்டவன் காட்டி அருளினான்.

அடியவர் :—திருமணப் பந்தரிலே வலிய ஆட்கொண்ட நம்பி ஆரூரருக்காக இவ்வாரூரர் மண்மிசை நடந்து தூதாகச் சென்றார்.

கலிக் :—என்ன ? யார் ? யார் பொருட்டு ? எங்கு சென்றார் ?

அடியவர் :—என் இவ்வளவு மனச் சீற்றம். சுந்தரர் ஒற்றியில் மற்றொரு குழலியை மணந்ததற்காக திருவாரூரில் இருக்கும் பரவையார் ஊடற்கொள்ள அவ்வூடலை நீக்க வன்றொண்டர் இறைவனை வேண்டினார். அவர் அத்தொண்டர் வேண்டுகோளுக் கிணங்கி இருமுறை பரவை வீட்டிற்குத் தூதாகச் சென்று அவளைச் சேர்ப்பித்தார்.

கலிக்காமர் :—என்ன ? கேவலம் ஒரு பெண்ணின் காரணமாக எல்லாம் வல்ல இறைவனை உலகம் ஆக்கிய ஒரு பெரு முதலைத் தூதாக அனுப்பினனா ? நன்று அவன் செயல். வேறென்ன விசேடம்.

அடியவர் :—வேறொன்று மில்லை.

கலிக்காமர் :—வாரும் உட்சென்று உணவுகொள்வோம். (இருவரும் செல்கின்றனர். கலிக்காமர் சூலைநோயால் வருந்துகின்றார்.)

ஆ ! என்னே இக்கொடிய சூலை நோய். வன்றொண்டர் தூதனுப்பிய செய்தி கேட்ட செயலே கொடிதென்றிருக்க இச்சூலைநோய் அதனினும் கொடிதாகவன்றோ காணப்படுகின்றது.

(வயிற்றைப்பிசைந்து) ஆ ! இக்கொடிய சூலைநோய் என் உயிரையும் சேர்த்து வாட்டுகின்றது. அன்று அப்பருக்குண்டாகிய சூலைநோய் செய்தகொடுமையைக் கேட்டிருக்கின்றோம். இன்று நேராகவே அக்கொடுமையை நான் கஷ்டப்பட்டு அனுபவிக்க வேண்டி வந்ததே.

இறைவா ! அன்று வாகீசரைக் காத்து நின்ற வள்ளால்! இக் கொடிய சூலை நோய் என்னைப் பெருந்துயர் வழிச் சென்று சாரக் காட்டியுள்ளதே. நான் என் செய்வேன். எவ்வாறாயினும் நான் இந்நோயினின்றும் நீங்கத்தக்க வழி

அருள்வாய். அடியார் பிணி நீக்கும் அருள் மருந்தே! புன்கூர் மேவியே புனித! உன்னையன்றி ஒருவரையும் உளத்தமைத்து நின்றறியேனே. அஞ்சலென்றனை ஆட்கொள்ளல் உன் அருளின் திறமன்றோ. எவ்வாற்றாயினும் உன்பாதம் பற்றினேன்; பரவினேன்; பணிந்தேன். என்நோய் நீக்குவாய். (இறைவன் தோன்றுகிறான்.)

இறைவன்:—அன்ப! உன் நோயறிந்தோம்; உன் நோய்தீர்க்க வல்லவன் அவ்வன்றொண்டன் ஒருவனேயாகும். எனவே அவன் வந்து உன் நோயை நீக்குவான்.

கலிக்:—ஆண்டவ!

எம்பிரா னெந்தை தந்தை தந்தை யெங்கூட்ட மெல்லாந்
தம்பிரான் நீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை யென்னைநின் றீருஞ் சூலை
வம்பென வாண்டு கொண்டா னொருவனே தீர்ப்பான் வந்து!

நீர் அவ்வாறு செய்தால் நான் கூறுவதொன்றுமில்லை. உம்பெருமைதான் என்னே! (அவர் வருந்துகின்றார்.)

இறைவன்:—(தனி) சரி இனி நாம் வன்றொண்டரை இங்கனுப்புவோம். (மறைகின்றார். சிறிதுநேரஞ்சென்று)

ஓர்ஆள்:—ஐயா வன்றொண்டர் இதோ நம் ஊர் அருகே தங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

கலிக்:—சரி நீ செல். (செல்கிறான்) ஆ! அக்கொடியோன் எம்பிரானைத் தூதனுய் ஏவினனே! இங்கு வருகின்றானே! மற்று அவன் வந்து தீர்ப்பதன் முன் நான் இம்மாயப்பற்றில் நின்றென்னை நீங்கா பாதகச் சூலை பொருந்திய இவ்வயிற்றைக் கிழித்துக் கொண்டு இறக்கின்றேன்.

(வயிற்றைக் கிழித்து இறக்கிறார்; மனைவியார் உள் நுழைந்து காண்கிறார்.)

மனைவி:—என்னே இக்கொடுமை! ஈசா! ஈதோ நான் காணவேண்டிய காட்சி.

(அழுது கத்தி எடுத்துக் குத்திக் கொள்ளப் போகிறார்; ஓர் ஆள் வந்து சுந்தரர் நம் வாயிலில் வந்திருப்பதைத் தெரிவிக்கிறான்.)

மனைவி :—சரி இதோ உடனே வருகிறேன். நீ அவரை வரவேற்க ஏற்பாடுசெய். (வீதியிற்சென்று விதிமுறை வணங்கி உள்ளழைத்து அமரவைக்கிறார்.)

சுந்தரர் :—அம்மா! நான் சூலைநோயால் வருந்தும் கலிக் காமரைக் காணவேண்டும். அவர் எங்கு இருக்கிறார்? நான் சென்று பார்க்கலாமா?

மனைவி :—அம்பலவாணன் அடித்தொண்டரே! அவர் உடம்பிற்கு ஒன்றுமில்லை. நன்றாக உள்ளே உறங்கிக்கொண் டிருக்கிறார்.

சுந்தரர் :—நீங்கள் கூறியது உண்மையாயினும், அவர் உடம்பிற்கு ஒன்றுமில்லையாயினும் என் மனம் ஏனோ துன்புறுகிறது. ஆதலால் அவரை நான் காணவேண்டும்.

(இருவரும் உட்சென்று அவர் இறந்திருத்தலைக் காண்கிறார் கள்).

சுந்தரர்;—ஹா! இக்கொடுமையைக் காணவா இறைவா என்னை இங்கு வரவழைத்தனை? (பதைத்து) நானும் அவர் சென்ற வழியே சென்று அவரைக் காண்பேன்,

(கத்தியை நோக்க, இறந்த கலிக்காமர் உயிர் பெற்று எழுந்து இவர் கையை பிடித்துக்கொள்கிறார். இருவரும் ஒருவரையொருவர் விழுந்து வணங்குகின்றனர். பூமாரி பொழிகின்றது.)

கலிக்காமர் :—இறைவன் அன்புடை எழிற்றொண்ட! நின்வரவால் நாமும் நன்னிலை யடைந்தோம். உண்மை அன் பைக் காட்டவந்த உறுசூலை நோயே உனக்கு வணக்கம். நாம் சென்று திருப்புன்கூர் செல்வனை வழிபடுவோம் வருவீர்.

சுந்தரர்:—ஆம் சென்று அருளுடை அண்ணலை வழிபட வேண்டும்.

(இருவரும் கோயிலுக்குட் செல்கின்றனர். அடியவர் பலர் உட்புகுகின்றனர்).

சுந்தரர் :—

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்ற னுருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியி
லிவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே.

---

அங்கம் 5] [காட்சி 2

## திருஅஞ்சைக்களம்

(சேரமான் பெருமாள் திருவஞ்சைக்களத்தே இறைவனுக்குப் பணி செய்துகொண்டிருக்கிறார்.)

கறைமிடற்றண்ணல்! கற்பகக் கோனும் கரிநிறமாலும் பொற்கமலத்தமர் புண்ணிய கோவும், கண்டறிய முடியாத பொங்கொளி முதலே! பொய்யாப் பெருவாழ்வே! பொற்புடைஅமிர்தம் அமரர்க்களித்துப்பொல்லாவிடமுண்ட புனித! சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த தூமனத் தொண்டருள்ளீர்! நான் உம்மைப் பணிய என்னை ஆட்கொண்ட அம்பலச்செம்மால்! மன்றில் நடம்புரி மதியுடைக் கொழுந்தே! உம்பதம் பணிந்தேன். (நாள்தோறும் கேட்ட இறைவன் சிலம்பொலி அன்று கேளாதிருக்க) ஹா! நான் என்ன பிழை செய்தேன். நாடோறும் என் பூசை முடிவிற் கேட்டு

ஆனந்திக்குஞ் சிலம்பொலி இன்று கேட்கவில்லையே! ஏனோ? இன்று நான் செய்த பிழைதான் யாதோ? அருள் பெருகு தனிக்கடலாய்! அம்பலத்துள் அருநடம் புரியும் ஆண்டவன் சிலம்பொலி இன்று நான் கேட்கக்கூடவில்லையே. இனி உடம்பிருந்து என் பயன்? செவியால் பெறும் பயன் யாது? இதோ இந்த உடம்பை யானே கொன்று போடுகிறேன். (கத்தியை யுருவ ஒலி கேட்கிறது) ஈதென்ன ஆச்சரியம்! இப்பொழுது கேட்கப்பெற்றேனே. இறைவா! இத்துணைக் காலம் தாழ்த்து இன்னே நின் ஒலி கேட்கக் காரணம் யாதோ? அருளிச் செய்யவேண்டும்.

அசரீரி :—அன்ப! பொன்னம்பலத்தில் வன்றொண்டர் நம் கூத்தாடுதலைக் கண்டு ஒன்றிய உணர்வால் நம்மைப் போற்றிப் பதிகம் பாடியதால் அதைக் கேட்டு வரக் காலம் தாழ்த்தோம்.

சேரர் :—ஹா! இன்று சிலம்பொலியோடு திருச்சொல் ஒலியும் கேட்கப் பெற்றேன். சிலம்பொலி கேட்க வில்லையே என்று வருந்தியதற்குப் பதிலாக பெரும் மகிழ்ச்சி உற்றேன். வன்றொண்டரது இசையே வாணரை மயக்கிய தென்றால் அத்தொண்டரை நாம் காணவேண்டுவதவசியமன்றோ? உடனே தில்லைக்குப் புறப்பட வேண்டும். நம் மந்திரியை வேண்டிய ஏற்பாடுகள் யாவையும் செய்யச் சொல்வோம்.

(காவற்காரனை ஏவுகிறார். சிறிது நேரம் சென்று மந்திரி உட்புகுகிறார். இவரும் பூசை அறையிலிருந்து வெளி வருகிறார்.)

மந்திரி :—சேரர் பெருமானே! ஈண்டு எனை அழைத்த காரணம் யாதோ?

சேரர் :—மதிவன்மை மிக்க மந்திரி! நான் சுந்தரர் என்னும் சிறந்த அடியவரைப் பற்றி ஆண்டவனாலேயே கேள்விப்பட்டேன். அவர் இசை கேட்டு அவ்விறைவனே எல்

லாத் தன்மையையும் விட்டிருந்தாரென்றால் அவ்வடியவர் பெருமை என்னென்பது! ஆகவே அவரை நம் நாட்டிற்கு அழைத்து வந்து நம்முடன் சிலகாலம் இருக்கச் செய்ய வேண்டும். அதற்கு இன்றே புறப்பட வேண்டும். அப் புறப்பாட்டுக்கு வேண்டிய தக்க ஏற்பாடு செய்யவே உம்மை இங்கு அழைத்தேன்.

மந்திரி :—சேரர்குலக் கொழுந்தே! இத்தொண்டில் என்னையும் ஈடுபடச் செய்த தங்களுக்கு என்செய வல்லேன். ஏற்பாடெல்லாம் விரைவில் முடிவுபெறும். தாங்கள் புறப் படலாம்.

---

அங்கம் 5] [காட்சி 5

### திருவஞ்சைக்களத்துத் திருக்கோயில்

(அனைவரும் இறைவனை வழிபடுகின்றனர்.)

சுந்தரர் :—

முடிப்பது கங்கையுந் திங்களுஞ் செற்றது மூவெயில்
நொடிப்பது மாத்திரை நீறெ ழக்கணை நூறினர்
கடிப்பது மேறுமென் றஞ்சு வன்றிருக் கைகளால்
பிடிப்பது பாம்பன்றி யில்லை யோவெம் பிரானுக்கே.

அஞ்சைக்களத்தப்ப!உன் அருட்பெரு வருக்கண்டேன். ஆனந்தம் கொண்டேன். மலைநாட்டின் பெருந் தவத்தின் மகிழ்வோனே! சேரர்கள் தம் திருநாட்டைச் சீர்பெறச் செய் வோய்! கொங்கு நாட்டுக் குழக! உன் அருளால் அன்றோ இச் சேர நாட்டில் சில தீந்தமிழ் நூல்கள் தோன்றின. எத் தகைய தேவர்க்கும் வணங்காத செங்குட்டுவனது சென்னி உனை வணங்கிச் சென்றது என்றால் உன் பெருமை உரைக் கற் பாற்றோ!

சேரர் :—வன்றொண்டரே! இனி நாம் நம் இல்லம் செல்வோம்.

(சுந்தரர் யானைமீது அமர, சேரர் சாமரை இரட்ட வீதிவழியே அரண்மனை சென்று சிங்காதனத்தில் அமர்ந்து நிற்க தேவிமார் வாசனை எந்தி பூசனை புரிகின்றனர்.)

சேரர் :—சுந்தர ! உன் வரவால் என்னுடம், என் வீடும் என் ஊரும் நானும் அடைந்த மகிழ்ச்சி அளவிடற்கரிதாய் பரந்து கிடக்கின்றது. என் இல்லம் செய்த தவப் பயனால் இங்கெழுந்தருளி எம்மை யெல்லாம் மகிழ்வித்த உம்முடைய பெருமையையுரைக்கற்பாற்றோ. வாரும் உணவுகொள்வோம்.

(உள் சென்று உணவருந்தி வருகின்றனர். சுந்தரர் முன் வந்து தனிமையில் நிற்கிறார்.)

சுந்தரர்:—ஹா! நான் திருவாரூரைவிட்டு நாட்கள் பலவாயினவே. எத்தனை நாள் பிரிந்திருப்பேன். இறைவனையே உடனே சென்று அவசியம் காண வேண்டும். இவர்களது அன்போ அளவிடற்பாலதாய் பெருகிக் கிடக்கிறது.

(சேரர்பின் வருதல்)

சேரர் :—உயிர்த் தோழரே ! என் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றீர் ?

சுந்தரர் :—ஒன்றுமில்லை ; நான் என் ஊரைவிட்டுப் புறப்பட்டு வந்து தியாகேசரைக் காண்பதை விடுத்து எத்தனை நாளாயிற்று ? உடனே புறப்படவேண்டும். ஆரூர் அப்பனைத் தரிசனம் செய்ய வேண்டும். என் வேண்டுகோளுக்கு மறுக்காது இணங்கி என்னை உடனே வழியனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

சேரர்:—ஹா! தாங்கள் செல்ல எவ்வாறு என்மனம் ஒப்பும் ?

சுந்தரர்:—நீர் ஒன்றும் வருந்தாதீர். இவையெல்லாம் ஆண்டவன் ஆணை. நீர் உமது பதியின் கண்ணிருந்து அரசு புரியும். நான் சென்று சீக்கிரம் வருகிறேன்.

சேரர் :—அன்பரே ! உமது திருவடிகளே எனக்கு அரசாட்சி. ஆகையால் தேவரீரை விட்டுப்பிரியேன். பிரியினும் ஆற்றேன். ஆயினும் திருவாரூர்க்குச் செல்ல எழுந்த மனக் காதலை நீக்கவும் அஞ்சுகின்றேன்.

சுந்தரர் :—தோழரே ! ஆரூர் செல்லாது இனி அரைக் கணமும் தாமதியேன். நீர் மாதோர்பாகன் அருளால் இங்கிருந்தே அரசு புரியும்.

சேரர் :—அவ்வாறுயின் தங்கள் மனம் போல் நடக்கக் காத்துக் கொண்டிருக்கிறேன். நான் கொடுக்கும் பொருள்களை மாத்திரம் தயவு செய்து உடன் எடுத்துச் செல்வீர்களாக.

சுந்தரர்:—நன்று ; அவ்வாறே செய்கின்றேன்.

(சுந்தரர் புறப்பட, ஆட்கள் நிரம்பப் பொருள் எடுத்துப் பின் செல்கின்றனர்)

---

அங்கம் 6] [காட்சி 1

## அவிநாசி

(மறையவர் வீதியில் சுந்தரர் வர, ஓர் வீட்டில் அழுகையும் மறு வீட்டில் மங்கல ஒலியும் கேட்கின்றது.)

சுந்தரர் :—ஈதென்ன வியப்பு! ஓரே வீதியில் ஓர் வீட்டில் மங்கல ஒலியும் அடுத்த வீட்டிலே அழுகை ஒலியும் கலந்தாற் போல் கேட்கின்றதே. இதன் காரணத்தைச் சென்று விசாரிப்போம்.

(அருகில் சென்று ஒருவரைக் கேட்கிறார்.)

ஐயா ! ஈதென்ன ! இரு வீட்டிலும் இரு வேறு ஒலிகள் கேட்கின்றனவே.

ஒருவர் :—ஐயா, மங்கல ஒலி கேட்கும் வீட்டில், அவ்வீட்டுப் பிள்ளைக்கு உபநயனம் நடக்கின்றது. அப்பிள்ளையும் அடுத்த வீட்டுப் பிள்ளையும் சிறுவராயிருக்கும்போது ஓர் நாள் மடுவில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அயல் வீட்டுப் பிள்ளையை முதலை ஒன்று விழுங்கி விட்டது. அதுவும் இருந்தால் இப்பொழுது உபநயனம் ஆகுமேயென்று அவர்கள் வருந்திக்கொண்டிருக்கின்றனர்.

சுந்தரர் :—(மகனை இழந்த தாய் தந்தையர் ஓடி வந்து இவர் பாதங்களில் விழ) பெரியீர் நீங்கள் அஞ்சவேண்டாம் ; இன்பமைந்தனை இழந்தவர் நீர் தாமோ ?

பெற்றோர்:—அதுமுன்பு நிகழ்ந்தது. தேவரீரைவணங்க விரும்பி இருந்தோம். அந்த விருப்பம் பழுதாகாமல் தாங்கள் எழுந்தருளப் பெறும்பேறு பெற்றோம். இனி எமக்குவேண்டுவது யாது ?

சுந்தரர் :—நீவிர் முன் வருந்தியதைக் கண்டேன். சிறுவனை நான் அந்த முதலை வாயிலிருந்து அழைத்துத் தருகின்றேன். அம்மடு எங்குள்ளது ?

ஒருவர் :—அதோ தோன்றும் சோலைக்குள் அம்மடு இருக்கின்றது.

சுந்தரர் :—வாரும் எல்லோரும் அங்கு செல்வோம்.

(அனைவரும் செல்கின்றனர். மடுவின் கரை அடைந்து) இம்மடுவிலோ, மகன் முதலையால் கொள்ளப்பட்டான் ?

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியு மந்தமு மாயினாய்

புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே.

(முதலை உண்ட பிள்ளையை வயது வந்ததாகக் கொண்டுவந்து கரைக்கு வைத்தது.)

சுந்தரர் :—இதோ, உம்மைந்தன் ; கொண்டு உபநயனம் செய்து மகிழ்வீர்.

---

அங்கம் 6] [காட்சி 2

(சுந்தரர் திருவஞ்சைக்களத்தே இறைவனை வணங்குகின்றனர்.)

### திருஅஞ்சைக்களம்

வெறுத்தேன் மனைவாழ்க் கையைவிட் டொழிந்தேன்
விளங்குங் குழைக் காதுடை வேதியனே
இறுத்தா யிலங்கைக் கிறையா யவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்
கறுத்தாய் கடனஞ் சமுதுண்டு கண்டங்
கடுகப் பிரமன் தலையைத் திலுமொன்
றறுத்தாய் கடலங் கரைமேன் மகோதை
யணியார் பொழிலஞ் சைக்களத் தப்பனே.

(மால் முதலியோர் வெள்ளையானையுடன் அருகே வருகின்றனர்)

சுந்தரர் :—ஆ! அதோ யாரோ வருகின்றனர். சிவ கணப் பொலிவு காண்கின்றது. மால் முதலியோரும் காண்கின்றனர். என்ன? இன்று நான் கயிலை காண்கின்றேன். ஒன்றும் அறிய கில்லேன்.

(யாவரும் நெருங்கி.)

மால் :—இறைவன் அடித்தொண்டரே! உம்மை இவ் வெள்ளையானையின்மேல் ஏற்றி அழைத்து வரும்படி ஆண்டவர் எங்களை அனுப்பினர். ஆதலால் தயவு செய்து எங்களுடன் வாரும்.

சுந்தரர் :—அப்படியே (தனக்குள்) ஆயினும் நம் நண்பர் சேரமானைத் தனியே விட்டுச் செல்கின்றோமே. அவரையும் உடனழைத்தல்லவோ செல்ல வேண்டும். அவரை மனதில் நினைக்கின்றேன்.

(யானைமேல் ஏற ஆகாயத்தில் பறக்கின்றது. சிறிது நேரத்தில் சேரமான் அங்கே வருகின்றார்.)

சேரமான் :—இங்கன்றோ நம்மை வன்றொண்டர் நினைத்த இடம்; அவரைக் காணோமே (நிமிர்ந்து பார்க்கின்றார்.) அதோ கைலைக்கு வெள்ளை யானையின் மேல் செல்கின்றார். நாமும் நம் வெண்புரவி மேற்செல்வோம்.

(குதிரையின் காதில் பஞ்சாட்சரம் ஓதுகின்றார். குதிரை பறந்து வேகமாக யானையை வலம் செய்து முன் செல்கின்றது.

சுந்தரர் :—

இந்திரன் மால்பிரமன் னெழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளவென்னை மத்தயானை யருள்புரிந்து
மந்திர மாமுனிவ ரிவனாரென எம்பெருமான்
நந்தம ரூரனென்றான் னொடித்தான்மலை யுத்தமனே.

---

அங்கம் 6] [காட்சி 3

## கைலை இறைவர் சன்னதி

(சுந்தரர் உள்வருகின்றார். வீழ்ந்து வணங்குகின்றனர்.)

இறை :—ஊரனே வந்தனையா? வா.

சுந்தரர் :—எனை ஆட்கொண்ட ஈசா! உமது திருவருளால் வரப்பெற்றேன். எனினும் என் நண்பர் சேரமான் வாயிற் புரத்திலே தடைப்பட்டு வரமுடியா திருக்கின்றார். அவரையும் வரவழைத்தருளீர்.

இறை :—பெரிய தேவா! நீ சென்று சேரமானை அழைத்து வா.

பெரியதேவர் :—அப்படியே,

(சென்று அழைத்து வருகின்றார். வந்து வீழ்ந்து வணங்குகின்றார்.)

இறை :—(புன்சிரிப்புக் காட்டிச்) சேரமானே இங்கு நாமழையா முன்னமே நீயேன் வந்தாய்?

சேரமான் :—(அஞ்சல் செய்து) அடிநாயேன் ஆரூரர் கழல் போற்றி புரசையானைமுன் செலுத்தவந்தனன். பொழியும்நின் கருணைத் தெண்டிரை வெள்ளம் எனை இங்கு கொண்டுவந்து சேர்த்தலின் தேவரீர் திருமுன்வரப் பெற்றேன். நான் தங்களைப் பாடிய பாடலொன்றுண்டு. பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும் பெருமையாய்! உனை அன்பால் திருஉலாப் பாடினேன். இதைத் தேவரீர் திருச்செவி சாய்த்தருள வேண்டும்.

(ஆதி உலாவினைப்படித்து அவையில் அரங்கேற்றினர். அனைவரும் நன்றென மொழிகின்றனர்)

இறைவனுர் :—நன்று நுந்திருமொழி ; நீவிர் இருவரும் இக்கைலை ஒலக்கத்திலேயே சிவகணத் தலைவர்களாய் இருந்து சீர் பெறவாழ்வீர்கள்.

இருவரும் :—அப்படியே செல்கின்றோம்.

(இருவரும் செல்கின்றனர். மறுபுறம் அனிந்திதை கமலினி வருகின்றனர். பணிகின்றனர்.)

பார்வதி :—அருமைச் சேடியர்களே! வாருங்கள் ; நீங்கள் முன்போல் எனக்குப் பணியாற்றுவீர்கள்.

இருவரும் :—அப்படியே அம்மா.

முற்றிற்று

# தேன் கூடு

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

## மக்களுள் மின்சாரச் சக்தி

லண்டனில் ஒரு ரசாயனச் சாலையில் ஒரு தென் ஆப்பிரிக்க டாக்டரும் ஒரு என்ஜிநீயரும் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். குழந்தை பிறந்தவுடன் உடம்பில் ஓரளவு மின்சார சக்தியுள்ளதாம். பெண்களுக்குக் குறைவாம். மக்கள் குணாதிசயத்துக்குத் தக்கபடி அச் சக்தியிருக்கிறதாம். புத்திசாலியாகவுள்ளவர்கட்கு அதிகமாம். சராசரி ஐந்நூறு வோல்டு (500 volts) பலமுள்ள சக்தியுள்ளதாம். இறந்தவுடன் சக்தி மறைகிறதாம். பைத்தியக்காரர்கள், மூளை வியாதியுள்ளவர்கள் முதலியோருக்கு இச்சக்தி மிகக்குறைவாம். இறந்தவுடன் இச்சக்தி யென்னவாகிறது என்பது கூர்ந்து ஆராயப்பட்டு வருகிறது. ஆன்மாவுக்கும் இம்மின்சாரசக்திக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா என்பதும், சூக்கும உடலுக்கும் இச்சக்திக்கும் தொடர்புண்டா வென்பதும் ஆராயப்படுகின்றன.

* * *

## குரங்குப் பிணம்

குரங்குப் பிணம் காணக்கிடைக்காது. சிம்லாவில் ஒரு குரங்கு தாவிக் குதிக்கும்போது எலெக்ரிடிக் கம்பியைத் தொட நேர்ந்து இறந்தது. உடனே நூற்றுக் கணக்கான குரங்குகள் ஒன்று கூடின. நான்கு குரங்குகள் பிணத்தைத் தூக்கிச்செல்ல மற்றவை மௌனமாகப் பின்சென்றன. மனிதர் எவ்வளவு பின் தொடர்ந்தும் அவை தாவித் தாவிச் சென்று ஒருவருங் காணாத இடத்துக்குப் போயின.

றியிருக்கும் இயல்பு முதலியனபற்றி மிக அழகாகப் பேசினார்கள். இறுதியில் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் சுவாமிகட்கு நன்றி கூறியபின் கூட்டம் முற்றுப்பெற்றது. இவ்விரிவுரையின் சுருக்கம் அடுத்த இதழில் வெளிவரும்.

6. சமாஜ வெளியீடாகிய பெரியபுராண முதற்பதிப்பு ஏறக்குறைய செலவாகி விட்டபடியால் இரண்டாம் பதிப்பு அச்சிடப் பெற்றுவருகிறது. சமாஜ ஆண்டுவிழாவில் புதிய பதிப்பு விற்பனைக்கு வரும். 8, 9, 10 ஆகிய திருமுறைகளின் இரண்டாம் பதிப்பை அச்சிட்டு வெளிப்படுத்தப் பொருளுதவி வேண்டற்பாலது. விரிந்த மனமுடைய கொடையாளர் இருவர் பரந்த இத் தமிழ்நாட்டில் இதுவரை முன் வாராதது மிக வருந்தத் தக்கது. இனியேனும் இச் சிவபுண்ணியத்தில் ஈடுபட இருவர் முன்வருக. முன்பணமாகவே தவிர நன்கொடையாக எவரும் தரவேண்டும் என்று எத்தொகையும் கேட்கப்படவில்லை யென்பதை ஒருவரும் மறத்தல் கூடாது.

7. ஸ்கந்தர் சஷ்டி வழக்கம்போல் இராயப்பேட்டை ஸ்ரீபால சுப்பிரமணிய பக்தஜன சபையில் ஆறு நாட்களிலும் வழிபாடு, விரிவுரை முதலிய வைபவங்களோடு மிகச் சிறப்பாக நடைபெறும். சப்தமியன்று திருக்கலியாணக் கொண்டாட்டமும் நடைபெறும்.

8. ஸ்கந்தர் சஷ்டி நாட்களில் பாராயணஞ்செய்து முருகன் திருவருள் பெறுதற்குரிய சிறந்த நூலாகிய திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்பு முதலிய அருணகிரிநாதர் திருவாக்கை சமாஜத்தின் சுத்தப் பதிப்பாகப் பார்த்து உடனே வாங்கிப் புண்ணியம் பெறுவார்களாக.

---


## சிவஞான பாடியம்

சைவ சித்தாந்த சாத்திரப் பெருங் கருவூலமாக விளங்கும் சிவஞானபாடியம், சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாக வெளி வந்துவிட்டது. இப்பதிப்பில் சிவஞான போதமூலம், சிவஞான சுவாமிகளுடைய பாடியம், வடமொழிச் சிவஞானபோத மூலம், சிவஞானபோதச் சூர்ணிக்கொத்து, மெய்கண்டார் வரலாறு, சிவஞான சுவாமிகள் வரலாறு, பாடியத்தைப்பற்றித் திருவாளர் - திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதிய ஆராய்ச்சி அணிந்துரை முதலியன அடங்கியுள்ளன. இவ்வரிய நூல் இம்முறையில் இவ்விலைக்கு எவராலும் தரப்படவில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் ருஎசு + 40 பக்கங்கொண்ட முழுக் கலிக்கோ பைண்டு செய்யப்பெற்ற அழகிய பதிப்பு.

**தனிப்பிரதி விலை ரூபா ஒன்று;** ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா ஒன்பது
**பதினொரு பிரதிகள் விலை ரூபா பத்து ;**

ரயில்வே பார்சல் கூலி, தபாற் கூலி வேறு

**உடனே பிரதிகட்கு மணியார்டர் அனுப்புக.**

Registered No. 2330. "SIDDHANTHAM" Vol. 10. No. 10

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# சம்பந்தர் தேவாரம்

இரண்டாம் பதிப்பு

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் சமாஜத்தின் இரண்டாவது அடக்கவிலைச் சுத்தப் பதிப்பாகக் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சமாஜ விழாவின் தொடக்கத்தில் திருக்கச்சியேகம்பத்தில் மாவடி வைகும் சிவபெருமான் திருமுன்பு வெளியிடப்பட்டது. இப்பதிப்பில் பாடல்கள் பைகா எழுத்திலும், முக்கிய பகுதிகள் தடித்த எழுத்திலும் உள்ளன. திருமுறை எண், பதிக எண், மொத்தப் பாடல் எண், சரித்திரமுறைப் பதிக அட்டவணை, முதற் குறிப்பகராதி, சரித்திரம், ஆராய்ச்சிக் குறிப்புகள், அரும்பொருளகராதி, சிவஸ்தல சிவசக்திநாம அட்டவணை முதலிய பல அருமைப் பாடுகள் இவ்விரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

தனிப் பிரதி ரூபா ஒன்றேகால்.

ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பத்து.

எட்டுப் பிரதிகள் விலை ரூபா ஒன்பது.

தபாற்கூலி ரயில்வே பார்சல் கூலி வேறு.

உடனே முன் பணம் அனுப்பி விண்ணப்பஞ் செய்க.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
"திருவருளகம்", 22-A, கல்லுக்காரத் தெரு,
மயிலாப்பூர், சென்னை

Printed by T.V. Volaganathan at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah, Edited and Published by A. Somasundaram Chettiar, M. A., for the Saiva Siddhanta Maha Samajam, at "Thiruvarulagam", 22-A, Kallukaran Street, Mylapore, Madras.